உன் பெலனை ஸ்திரப்படுத்து

ப.சாம் ஜெபத்துரை

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

உன் பெலனை மிகவும் ஸ்திரப்படுத்து!

(FORTIFY THY POWER MIGHTILY)

J. சாம் ஜெபத்துரை

வெளியிடுபவர்:

சகோ. J. சாம் ஜெபத்துரை

50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு

கோடம்பாக்கம், சென்னை - 600 024.

மறு பதிப்பு : பெப்ருவரி 2004

நன்கொடை ரூ.10/-

வெளியீடு எண் : 58

அச்சிட்டோர்:

ஓரேப் ஆர்ட் பிரிண்டார்ஸ்

50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு

கோடம்பாக்கம், சென்னை - 600 024.

போன்: 044-24840407, 24835299.

அர்ப்பணம்

என் பெலனாகிய கர்த்தாவே, உம்மில் அன்பு கூருவேன். கர்த்தர் என் கன்மலையும், என் கோட்டையும், என் இரட்சகரும், என் தேவனும், நான் நம்பியிருக்கிற என் துருகமும், என் கேடகமும், என் இரட்சணியக் கொம்பும், என் உயர்ந்த அடைக்கலமுமாயிருக்கிறார் (சங் 18:1-2).

என் அருமையான இயேசு ராஜா, என்னையும் இந்த சிறு நூலையும் உமக்கே அர்ப்பணிக்கிறேன்.

பொருளடக்கம்

எண் | பக்கம்

எண்		பக்கம்
1.	உன் பெலனை மிகவும் ஸ்திரப்படுத்து!	5
2.	வல்லமையாய் வாழ்ந்திடு!	13
3.	ஒத்துப்போகாதே, உறுதியாய் நில்!	20
4.	பெற்றுக்கொள், இரட்டிப்பான நன்மைகள்!	28
5.	நிரம்பி வழியட்டும்!	31
6.	கன்மலையின் வெடிப்பும், புறாவும்!	35
7.	முகரூபத்தைக் காண்பி!	40
8.	யாரிடத்தில் போவோம் ஆண்டவரே!	44
9.	மலைகள் பெயரட்டும்!	51

அத்தியாயம்

1

உன் பெலனை மிகவும் ஸ்திரப்படுத்து!

''சிதறடிக்கிறவன் உன் முகத்துக்கு முன்பாக வருகிறான்; அரணைக் காத்துக் கொள்: வழியைக் காவல் பண்ணு, அரையைக் கெட்டியாய்க் கட்டிக்கொள், உன் பெலனை மிகவும் ஸ்திரப்படுத்து'' (நாகூம் 2:1).

பரலோகத்திலிருந்து கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கும் அவசர தந்தி இது! பரம தளபதி, ஜாமக்காரருக்கு அறிவித்திருக்கும் எச்சரிக்கையின் தொனி இது! வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் தாக்குதலிலிருந்து நாம் நம்மைப் பாதுகாத்துக்கொள்ள தேவன் தந்திருக்கும் ஆலோசனை இது!

''சிதறடிக்கிறவன் வருகிறான்-அரணைக் காத்துக்கொள். வழியைக் காவல்பண்ணு. அரையைக் கட்டிக்கொள். பெலனை ஸ்திரப்படுத்து'' என்று எக்காளமாய் கர்த்தர் முழங்கி எச்சரிக்கிறார்.

இந்த வசனத்தை வாசிக்கும்போதே இதிலுள்ள அவ சரத்தையும், முக்கியத்துவத்தையும், தீவிரமாய் செயல்பட வேண்டிய கட்டாயத்தையும் அறிந்து கொள்கிறோம்!

சிதறடிக்கிறவன் உன் முகத்திற்கு முன்பாக வருகிறான். இனி கொஞ்சம் காலம் மாத்திரம் உண்டென்று சாத்தான் அறிவான்! இனி காலம் கடத்த முடியாது என்பதையும் அவன் உணர்கிறான். தேவ ஜனத்தைத் தாக்க, அவர்களைத் தன் தந்திரங்களால் வீழ்த்த இதுதான் கடைசி தருணம் என்பதை அவன் தெரிந்து வைத்திருக்கிறான்.

இன்றைக்கு எத்தனையோ இயக்கங்கள் மிக தீவிரமாக கிறிஸ்தவர்களுக்கு விரோதமாக இயங்கி வருவது யாவரும் அறிந்ததே! தெருப்பிரசங்கம் செய்ய முடியவில்லை! புதிதாக ஆலயங்கள் கட்ட முடியவில்லை! விடுதலையோடு ஆராதனை செய்ய முடியவில்லை! கிறிஸ்தவர்களுக்கு எதிரான பிரச்சாரம்! கிறிஸ்துவின் உபதேசங்களைத் தாக்கிப் பொதுக் கூட்டங்கள்! தடிகளோடு, கொம்புகளோடு பெரிய ஊர்வலங்கள்...!

மற்ற பக்கம் கம்யூனிஸ தீவிரவாதிகள், உலகத்தின் மூன்றிலொரு பங்கு நாடுகளை விழுங்கி ஏப்பம் விட்டு, கிறிஸ்தவர்களை ஒடுக்கிய பின்னும், ஓயாமல் முன்னேறி வருகிறதைக் காண்கிறோம். ''பரிசுத்த வான்களின் இரத்தத்தினாலும், இயேசுவினுடைய சாட்சிகளின் இரத்தத்தினாலும் வெறி கொண்டிருக்கிறதைக் கண்டேன்'' (வெளி 17:6) என்று யோவான் எழுதுகிறார்.

இன்னொரு பக்கம் கள்ளத்தீர்க்கதரிசிகளும், துர்உபதேசக்காரரும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையுங்கூட வஞ்சிக்கத்தக்க அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்து வருகிறார்கள்! கர்த்தர் எச்சரிக்கிறார். சிதறடிக்கிறவன் உன் முகத்துக்கு முன்பாக வருகிறான்!

ஏன் அவன் நம்மிடம் வருகிறான்? சிந்தித்துப் பாருங்கள் எந்த திருடனும் ஏழைகள் வீட்டிற்குச் செல்வதில்லை! அவன் செல்வந்தர் வீட்டிற்கே செல்கிறான். தேவபிள்ளையே, உனக்குள்ளே விசேஷித்த நித்திய ஜீவன் இருக்கிறது! உனக்குள்ளே விலையேறப்பெற்ற இரட்சிப்பு இருக்கிறது! நமக்குள்ளே பரலோக ராஜ்யம் இருக்கிறது மத். 13:44 சொல்கிறது: ''பரலோக ராஜ்யம் நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கிறது!'' தேவபிள்ளையே, நீ கர்த்தருடைய பார்வையில் விலையேறப் பெற்றவள் உனக்குள் தேவனுடைய பொக்கிஷங்கள் இருக்கிறதே! ஆகவே உனக்கு கர்த்தர் கடமையையும், உத்தரவாதத்தையும் கொடுத்திருக்கிறார். அவரது எச்சரிப்பின் தொனி உன் காதுகளில் விழட்டும்.

1. அரணைக் காத்துக்கொள்!
2. வழியை காவல்பண்ணு!
3. அரையைக் கெட்டியாய் கட்டிக் கொள்!
4. உன் பெலனை மிகவும் ஸ்திரப்படுத்து!

1. அரணைக் காத்துக்கொள்:-

ஏதேன் தோட்டத்தைக் கர்த்தர் சிருஷ்டித்தபோது அங்கே மனுஷனுக்கு ஒரு கடமையைக் கொடுத்தார் ''அதைப் பண்படுத்தவும், காக்கவும் வைத்தார்'' (ஆதி. 2:15) ஏதேனைக் காத்துக்கொள் என்பதே ஆதாமுக்குக் கொடுக்கப்பட்ட கட்டளை.

ஜெபவீரராக நமக்கு தேசத்தைக் காத்துக்கொள்ள வேண்டிய கடமை. கர்த்தருடைய சபையைக் காத்துக் கொளள வேண்டிய

உத்தரவாதம், குடும்பங்களைக் காத்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது!

அரணைக் காத்துக்கொள்! அரண் எப்படி உண்டாகும்? அநேக செங்கற்கள், சாந்து, கதவுகள் எல்லாவற்றையும் உறுதியான அஸ்திபாரத்தின் மேல் கட்டி எழுப்பும் போது தான் அது அரணாகிறது! தேவபிள்ளைகளின் ஐக்கியமே பெரிய அரணாகும்! ஜெபிக்கும் தேவ ஜனங்கள் கையோடு கைகோர்த்து ஜெப சங்கிலியாகி தேசத்தைப் பாதுகாக்கும் அரணாக நிற்கிறார்கள்! ''அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது; அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள்'' (எபே. 2:21,22).

தேவபிள்ளையே, அரணைக் காத்துக்கொள்! அன்பின் ஐக்கியத்தைக் காத்துக்கொள்! ஒருமனப்பாட்டைக் காத்துக்கொள்! ஜெப ஆவியைக் காத்துக்கொள்! சிறுபிள்ளையாயிருக்கும்போது படித்த கதை ஞாபகம் வருகிறதல்லவா? நான்கு மாடுகள் ஒன்றாக இணைந்திருந்தபோது சிங்கத்தால் அவைகளை மேற்கொள்ள முடியவில்லை. ஆனால் நரி தன் தந்திரத்தால் அவைகளைப் பிரித்துவிட்டபோது எளிதாக அவைகளை அடித்துக்கொன்று புசிக்க முடிந்தது!

கர்த்தர் எச்சரிக்கிறார்: அரணைக் காத்துக்கொள். நம்முடைய அரண் என்ன? நீதி 10:29 சொல்லுகிறது, ''கர்த்தரின் வழி உத்தமர்களுக்கு அரண்'' ஆமென் கர்த்தருடைய வழியைப் பின்பற்றுவோம். அவர் ஜெபித்தார்: பிதாவே... ''நாம் ஒன்றாயிருக்கிறது போல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்'' (யோவான் 17:22). இது இயேசுவின் உள்ளத்தைப் பிழிந்து வெளிவந்த ஜெபம். சீஷர்கள் ஒன்றாயிருக்க வேண்டும், ஒருமனப்பாட்டில் தேறினவர்களாயிருக்க வேண்டும், ஒருவரை ஒருவர் நேசிக்க வேண்டும் என்பதே!

ஆனால் இன்றோ நமக்குள் எத்தனை சபைப் பிரிவுகள்! எத்தனைப் போட்டிகள்! எத்தனைச் சண்டைகள்! எத்தனை விபரீத உபதேசங்கள்! தேவபிள்ளையே, அரணைக் காத்துக்கொள்!

கர்த்தருடைய பிள்ளைகளின் அன்பின் ஐக்கியத்திற்கு விரோதமாக எழும்பி வரும் சகல சத்துருவின் வல்லமைகளையும் நிர்மூலமாக்க முழங்காலில் நின்று அரணைக் காத்துக்கொள்!

நெகேமியா கட்டி எழுப்பிய எருசலேமின் மதில்களை இடித்துப்போட சிதறடிக்கக்கூடிய சத்துருக்கள் வந்தார்கள். நெகேமியா சொல்லுகிறார்: ''ஆனாலும் நாங்கள் எங்கள் தேவனை நோக்கி ஜெபம் பண்ணி, அவர்கள் நிமித்தம் இரவும் பகலும் ஜாமங்காக்கிறவர்களை வைத்தோம்'' (நெகே. 4:9). ''அவரவர் ஒரு கையினாலே வேலை செய்து, மறு கையினாலே ஆயுதம் பிடித்திருந்தார்கள்'' (நெகே 4:17).

அரணைக் காத்துக்கொள்! ''கன்மலைகளின் அரண்கள் உயர்ந்த அடைக்கலமாகும்'' (ஏசா. 33:16). கன்மலையின் வெடிப்புகளிலே உண்மையும் உத்தமமுமான ஜெபப்போர் வீரனாய் நின்று கர்த்தருக்காக பக்தி வைராக்கியத்தோடு யுத்தம் செய்வாயாக; அரணைக் காத்துக்கொள்வாயாக!

2. வழியைக் காவல்பண்ணு:-

எந்தெந்த வழிகளில் சாத்தான் உட்பிரவேசிக்கக் கூடும் என்பதை அறிந்து கொள். உன் தனிப்பட்ட வாழ்க்கையில் ஐம்பொறிகளின் வழியாக பாவம் உனக்குள் பிரவேசிக்கக் கூடும். மெய், வாய், கண், மூக்கு, செவியின் வழியாக பாவம் உனக்குள் நுழைகிறது என்பதை நீ அறிந்தால், உடனே வழியைக் காவல்பண்ணு!

கண்களுக்கு காவல் வை! ''உன் வலது கண் உனக்கு இடறலுண்டாக்கினால், அதைப் பிடுங்கி எறிந்து போடு; உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப்பார்க்கிலும், உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப்போவது உனக்கு நலமாயிருக்கும்'' (மத். 5:29) தேவபிள்ளையே, உன் கண் சுத்தமாயிருந்தால் உன் சரீரம் முழுவதும் சுத்தமாயிருக்கும். கண்களுக்கு காவல் வைத்தார் யோபு பக்தன்! ''என் கண்களோடே உடன்படிக்கை பண்ணின நான் ஒரு கன்னிகையின் மேல் நினைப்பாயிருப்பதெப்படி?'' (யோபு 31:1) என்று அவர் கேட்கிறார். கண்களுக்கு காவல் வைக்காத சிம்சோனின் கண்கள் பிடுங்கப்பட்டுப் போனது உனக்கு எச்சரிப்பாக இருக்கட்டும்!

நாவைக் காவல் பண்ணு! அதிகமான வார்த்தைகளினால் பாவமிராமல் போகாது! தாவீது ராஜா சொல்கிறார்: ''என் நாவினால் பாவஞ் செய்யாதபடிக்கு நான் வழிகளைக் காத்து,...என் வாயைக் கடிவாளத்தால் அடக்கி வைப்பேன்'' (சங் 39:1). வேதம் சொல்லுகிறது, ''உங்களில் ஒருவன் தன் நாவை அடக்காமல், தன் இருதயத்தை வஞ்சித்து, தன்னை தேவபக்தியுள்ளவனென்று எண்ணினால் அவனுடைய தேவ பக்தி வீணாயிருக்கும்'' (யாக் 1:26)

சிந்தனைகளை காவல் பண்ணு! சிந்தனைகள் மூலமாய் சாத்தான் ஊடுருவ முயற்சிப்பான். அருவருப்பான கனவுகளைக் கொண்டு வந்து சிந்தனைகளில் பாவத்தை உருவாக்குவான். அநேகர் சிந்தனை களினாலே வீணராய் போகிறார்கள். கெட்ட சிந்தனைகளை வேரோடு பிடுங்குவாயாக ''அவர்கள் தேவனை அறிந்தும், அவரை தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்திரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள்'' (ரோமர் 1:21) என்று வேதம் சொல்கிறது. உன் உள்ளம் கர்த்தரை துதித்துக் கொண்டே இருக்கும் போதும், பரிசுத்தாவியின் நிறைவு உன் இருதயத்தில் பொங்கிக் கொண்டிருக்கும்போதும் எந்த அசுத்த நினைவும் உனக்குள் பிரவேசிக்காது.

வழியைக் காவல் பண்ணு. எந்தெந்த வழிகளில் நீ அடிக்கடி விழுந்து விடுகிறாய் என்பதை தேவ சமுகத்தில் அமர்ந்து ஆவியான வரின் ஒத்தாசையோடு கண்டுபிடி. சிலருக்கு எரிச்சலின் சுபாவம் இருக்கலாம்; சிலருக்கு முன் கோபம் மிக அதிகமாக வரலாம்; சிலர் அடிக்கடி பொறுமையை இழந்து போகலாம்! இதையெல்லாம் சாதாரணமாகவோ, அல்லது பெலவீனம் என்றோ அசட்டை பண்ணாதே! சிறு சிறு சந்தேகங்கள் குடும்ப வாழ்க்கையை உடைக் கின்றன! மற்றவர்களை அற்பமாய் எண்ணும் சுபாவம் உன் ஆவிக்குரிய ஜீவியத்தை முன்னேற விடாதபடி தடுக்கின்றன.

ஒரு வௌவாலின் செட்டையில் ஒரு சிறிய துவாரம் இருந்தாலும் அது பறக்க முடியாது! சைக்கிளில் ஒரு பஞ்சர் ஏற்பட்டாலும் அது ஓடாது! ஒரு சிறு நரி திராட்சத்தோட்டத்தில் புகுந்தால், அது தோட்டத்தையே பாழாக்கி விடக்கூடும்! தேவபிள்ளையே, வழியைக் காவல் பண்ணு!

3. அரையைக் கெட்டியாய்க் கட்டிக்கொள்:-

அரையைக் கெட்டியாய்க் கட்டுதல் என்பது உறுதியான நோக்கத்தையும், விடாப்பிடியையும் குறிக்கிறது! எங்கள் ஊரில் மீன் வியாபாரிகள் உண்டு. பாரமான சுமையை தூர இடங்களுக்கு தூக்கிச் செல்லும் முன் தங்கள் அரையை உறுதியாகக் கட்டிக் கொள்வார்கள். மூச்சைப் பிடித்துக் கொண்டு சுமையை தூக்கிக் கொண்டு மிக வேகமாக தங்கள் எல்லையை நோக்கி நடப்பார்கள் அரை கட்டுவதால் அவர்களின் குடல்கள் குலுங்காது; இளைப்படைய மாட்டார்கள்; உறுதியோடு முன்னேறுவார்கள்.

இயேசு சொன்னார், ''உங்கள் அரைகள் கட்டப்பட்டதாகவும், உங்கள் விளக்குகள் எரிகிறதாகவும், தங்கள் எஜமான் கலியாணத்திலிருந்து வந்து தட்டும்போது, உடனே அவருக்குத் திறக்கும்படி எப்பொழுது வருவார் என்று காத்திருக்கிற மனுஷருக்கு ஒப்பாகவும் இருங்கள்'' *(லூக்கா 12:35,36)*.

அரையைக் கட்டுவதைப் பற்றி பேதுரு விளக்கும் போது, ''நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு, தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து; இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு அளிக்கப்படுங் கிருபையின்மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள்'' *(1 பேதுரு 1:13)* என்று விளக்குகிறார்.

மனதின் அரையைக் கட்டாவிட்டால், மனம் ஒரு நிலையில் இராமல் அங்கும் இங்கும் அலைமோதிக் கொண்டிருக்கும். மனதை ஒருமுகப்படுத்தி ஜெபிக்க முடியாது! நீங்கள் உபவாசம் இருக்கப் போவதற்கு முன்னால் உங்கள் மனதின் அரையைக் கட்டி, எப்பொழுதும் உபவாசத்தைக் குறித்தும், தேவ பிரசன்னத்தைக் குறித்தும் நினைத்துக் கொண்டே இருங்கள்; அப்பொழுது உங்கள் உபவாசம் மிகுந்த பலனைத் தரும்.

அரையைக் கெட்டியாய் கட்டிக்கொள். அப்போஸ்தலனாகிய பவுல் மனதின் அரையை எப்படிக் கட்ட வேண்டும் என்பதை விளக்குகிறார். ''சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும்'' என்று எபேசியர் 6:14-ல் குறிப்பிடுகிறார் தேவபிள்ளையே, உன் மனதின் அரையைச் சத்திய வசனங்களாலும், சத்தியமானவராகிய கிறிஸ்துவினாலும் கட்டிக்கொள்வாயாக! வேத வசனங்களின் மேல் உறுதியாய் நிற்க தீர்மானம் செய்.

4. உன் பெலனை ஸ்திரப்படுத்து:-

சத்துருவை எதிர் கொண்டுத் தாக்க உனக்கு பெலன் அவசியம்! தற்பாதுகாப்புக்காக அரணைக்காத்துக்கொள்! வழியை காவல்பண்ணு. அரையைக் கட்டிக்கொள். அதே நேரத்தில் முன்னேறிச் சென்று சாத்தானை வீழ்த்த உனக்கு பெலனும் தேவ வல்லமையும் மிக மிக அவசியம். ஆகவே உன் பெலனை மிகவும் ஸ்திரப்படுத்து!

பெலனை ஸ்திரப்படுத்துவது எப்படி என்பதை வேதம் அழகாக நமக்கு வலியுறுத்திச் சொல்கிறது, ''கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப் பெலன் அடைவார்கள்'' என்று ஏசாயா 40:31-ல் வாசிக்கிறோம் முழங்காலின் பலம் வல்லமையான பெலனால்

விளங்குகிறது. ஜெபிக்கும்போது ஜெபம் பரலோகத்திற்கு ஏறிச் செல்கிறது. அங்கேயிருந்து தேவ பெலன் இறங்கி ஜெபிக்கும் தேவனுடைய பிள்ளையை பெலப்படுத்துகிறது! D.L. மூடி பக்தனைப் பற்றி, ''அவர் ஒரு கையில் ஐரோப்பியா கண்டத்தையும், மறு கையில் அமெரிக்கா கண்டத்தையும் ஏந்தி, கர்த்தருடைய சிங்காசனத்திற்கு முன்பாக ஏந்திக் கொடுக்கக்கூடிய தேவ பலமுள்ளவராக விளங்கினார்'' என்று அறிகிறோம்.

இரண்டாவதாக, நீ பெலனை ஸ்திரப்படுத்த வேண்டுமானால், உன்னத பெலனாகிய பரிசுத்தாவியின் வல்லமையைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இயேசு தம் சீஷர்களிடம், ''நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள்'' (லூக். 24:49)என்று கட்டளையிட்டார்! ''பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைவீர்கள்'' என்று வேதம் சொல்கிறது (அப் 1:8).

ஆவிக்குரிய யுத்தத்தில் நமது பெலனும் பராக்கிரமமும் வீண்! பரிசுத்த ஆவியின் பெலத்தினாலேயே நாம் வெற்றி பெறமுடியும்! ''பலத்தினாலுமல்ல, பராக்கிரமத்தினாலுமல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும்'' என்று சேனைகளின் தேவனாகிய கர்த்தர் சொல்கிறார். தேவபிள்ளையே, ஆவியினால் நிரப்பப்படு; உன் பாத்திரம் நிரம்பி வழிந்து கொண்டே இருக்கட்டும்; உன் பெலத்தை மிகவும் ஸ்திரப்படுத்து!

மூன்றாவது, தேவ பலம் உன்னில் நிரம்ப, நீ விசுவாச வீரனாயிரு! விசுவாசம் நமது பெலன்! மலைகளைப் பெயர்க்கத்தக்க விசுவாசம், காட்டத்தி மரத்தை வேரோடுப் பிடுங்கி சமுத்திரத்தில் நட்டுவிடும் விசுவாசம் ஆகியவற்றைக் கர்த்தர் நமக்குப் போதித்திருக்கிறார்; விசுவாசத்தினால் பெலவான்களான விசுவாச வீரர்களின் பட்டியலை எபிரெயர் 11-ம் அதிகாரத்தில் நாம் தொடர்ந்து வாசிக்கிறோம்! சாராளைக் குறித்து வேதம் சொல்லுகிறது: ''விசுவாசத்தினாலே சாராளும் வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவரென்றெண்ணி, கர்ப்பந்தரிக்கப் பெலனடைந்து, வயது சென்றவளாயிருந்தும் பிள்ளை பெற்றாள்'' (எபி 11:11). தேவபிள்ளையே, உன் பலவீனத்திலே பலன் கொள்ளுவாயா! (எபி 11:34).

வேத வசனம் நமது பெலன்! இயேசுகிறிஸ்து வேத வசனங்களாகிய போர் ஆயுதங்களினாலேயே சத்துருவை வீழ்த்தினார் என்பதை மத் 4:1-10 வசனங்களில் வாசிக்கிறோம். கர்த்தருடைய

நாமம் நமது பெலன்! கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை என்று தாவீது கூறி எல்லா யுத்தங்களிலும் ஜெயம் பெற்றார்! (சங். 16:8).

தேவபிள்ளையே, உனக்கு இருக்கும் பெலன் போதாது! உனக்கிருக்கும் வல்லமை போதாது! உன் பெலனை அதிகமாய் மிகவும் ஸ்திரப்படுத்து! கர்த்தருக்காக நாம் வைராக்கியம் காட்ட வேண்டிய நேரம் இது! பராக்கிரமம் செய்ய வேண்டிய நேரமிது! இதோ கர்த்தர் உன்னைப் பெலப்படுத்த உன் அருகில் நிற்கிறார். 'எழும்பு சீயோனே; உன் வல்லமையைத் தரித்துக்கொள்'' (ஏசா 52:1).

அத்தியாயம்
2

வல்லமையாய் வாழ்ந்திடு!

பிரிட்டிஷ் படைகள் இங்கர்சால் என்னுமிடத்தில் மும்முரமாக யுத்தம் செய்து கொண்டிருந்தன. ஒருபோர் வீரன் பலத்த சேதமடைந்தான். சரீரத்திலிருந்து இரத்தம் 'குபு குபு' என்று வேகமாக வெளியேறிக் கொண்டிருந்தது. ஆனால் அவன் ஒரு உறுதியோடு தன் முழங்கையை தரையில் ஊன்றி, வேகமாக ஊர்ந்து தன் கூடாரத்திற்குள் வந்தான். அவன் கண்கள் எதையோ அவசரமாகத் தேடியது ஆம்; அவன் விரும்பி வாசித்த வேதாகமத்தைக் கண்டெடுத்து ஒரு வசனத்தை வாசித்தான். ''நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்'' (யோவான் 11:25,26). அவன் கண்கள் பிரகாசித்தன. முகத்தில் ஒரு நிம்மதியும் சமாதானமும் நிலவியது. தன் இரத்தம் தொய்ந்த காத்தை இந்த வசனத்தில் வைத்தான். ஆவி பிரிந்தது.

நம் இரட்சகரான இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்ததால் நமக்கு ஒரு மகிமையான நம்பிக்கை உண்டு. மரணம் ஒரு முடிவல்ல; மரணத்தை ஜெயமாக விழுங்கிய கிறிஸ்துவோடு நாம் எழுந்திருப்போம். பவுல் அப்போஸ்தலன் எழுதுகிறார், ''இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோமே; அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடேகூடக் கொண்டு வருவார்'' (1 தெச. 4:14). சகோதரனே, சகோதரியே உனக்கு அந்த மகிமையான நம்பிக்கை உண்டா?

உயிர்த்தெழுதலின் நம்பிக்கை கிறிஸ்தவ மார்க்கத்தில் மட்டுமே உண்டு. ஆகவே சரீரத்தை நாம் புறஜாதிகளைப் போல எரித்துவிடாமல், மகிமையோடு எழுந்திருக்கும்படியும், சாவாமையைத் தரித்துக் கொள்ளும்படியும் நாம் அடக்கம் செய்கிறோம் ஏழு ஜென்மங்களாக நாயாக நரியாக பன்றியாக மீண்டும் மீண்டும் நாம் பிறப்பதில்லை. ''அவர்'' இருக்கிற வண்ணமாக நாமும் மறுரூபமாக்கப்படுவோம் அல்லேலூயா! இந்த மகிமையின் நம்பிக்கையைத் தந்த உயிர்த்தெழுந்த மீட்பரை இருகரம் உயர்த்தி துதிப்போமாக.

1. நான் உயிர்த்தெழுவேன்:-

பழைய ஏற்பாட்டிலுள்ள பக்தன் யோபு ஒரு கேள்வியை எழுப்புகிறார். ''ஒரு மரத்தைக்குறித்தாவது நம்பிக்கையுண்டு; அது வெட்டிப்போடப்பட்டாலும் திரும்பத் தழைக்கும், அதின் இளங்கிளைகள் துளிர்க்கும். மனுப்புத்திரன் ஜீவித்துப்போனபின் அவன் எங்கே? மனுஷன் செத்தபின் பிழைப்பானோ?'' (யோபு 14:7,10,14).

புதிய ஏற்பாட்டில் கிறிஸ்து தரும் பதில் என்ன? ஆம்! ஆம், ஆமென். என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான் என்பதே! ''லாசருவே வெளியே வா!'' என்று கிறிஸ்து அழைத்தபோது உயிர்ப்பிக்கும் அவரது சத்தம் லாசருவை உயிரோடு கொண்டு வந்தது. லாசருவின் சாட்சியில் உயிர்த்தெழுதலின் வல்லமையை மகிமையாய் எழுதி நம் விசுவாசத்தை உறுதிப்படுத்தினார். அல்லேலூயா!

யவீருவின் மகள், நாயீனூர் விதவையின் மகன், இன்னும் எண்ணற்ற சாட்சிகள் கிறிஸ்துவின் உயிர்ப்பிக்கும் வல்லமையை எக்காள சத்தமாய் முழங்கிக் கொண்டே இருக்கின்றன!

அதை யோபு பக்தன் பிற்பாடு உணர்ந்து கொண்டார் ''என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசி நாளில் பூமியின் மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன். இந்த என் தோல் முதலானவை அழுகிப்போனபின்பு, நான் என் மாம்சத்தில் இருந்து தேவனைப் பார்ப்பேன்'' (யோபு 19:25,26) என்று தன் விசுவாசத்தை அறிக்கையிட்டு, உயிர்த்தெழும் மீட்பரில் களிகூருகிறதைப் பார்க்கிறோம்.

ஆம், சகோதரனே, மகிழ்ந்து களிகூரு, நம் மீட்பர் உயிரோடிருக்கிறார். நம்மை உயிர்ப்பிப்பார். அல்லேலூயா!

2. எழுந்திரு உயிர்த்தெழுந்திரு:-

1666-ஆம் ஆண்டு லண்டன் மாநகரில் ஒரு பெருத்த தீ விபத்து ஏற்பட்டது. அதில் தூய பவுலின் ஆலயம் சேதமடைந்து பல ஆண்டுகள் அப்படியே கிடந்தது. அதைத் தற்செயலாகப் பார்வையிடச் சென்றிருந்த இஞ்சினியர் ஒருவரின் கண்களில் கல்லில் செதுக்கப்பட்ட வாசகம் தென்பட்டது. வாசித்தார் ''நான் மீண்டும் எழுந்திருப்பேன்!'' என்ற வசனமே அது அந்த வார்த்தை அவருக்குள் வல்லமையாய் கிரியை செய்தது. இரவு பகலாக பாடுபட்டு 30 ஆண்டுகள் உழைத்து மறுபடியும் அந்த தேவாலயத்தை உயிர் பெற்று எழச் செய்தார்.

பாவத்தில் வீழுந்து கிடக்கும் சகோதரனே, நீ எழுந்திரு. உயிர்த்தெழுந்திரு விசுவாசி விழக்கூடாது. விழுவது பாவம்! அதைவிடப் பெரிய பாவம் விழுந்த இடத்திலே விழுந்து கிடப்பது! நீதிமான் ஏழு தடவை விழுந்தாலும் எழுந்திருப்பான் என்று ஞானி சொல்கிறார். உன் வீழ்ச்சியில் சோர்ந்துபோய் அப்படியே விழுந்து போய்விடாதே! உன் உயிர்த்தெழுந்த மீட்பர் உன்னை உயிர்ப்பிக்கும் படியாக, உன்னைப் பிரகாசிக்கச் செய்யும்படியாக, உன்னை மகிமை யான பாத்திரமாக உபயோகிக்கும்படியாக விரும்புகிறார்.

''அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார்.'' ''நம்மை கிறிஸ்துவுடனே கூட உயிர்ப் பித்தார்.'' ''கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்.'' அது மட்டு மல்ல, கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார் (எபே. 2:1-7). அல்லேலூயா! அல்லேலூயா!

உயிர்ப்பிக்கும் வல்லமை, புதிதாக்கும் கிருபைகள், தெய்வீக சுபாவங்கள் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவிலிருந்து உன்மேல் இறங்கிக் கொண்டே இருக்கட்டும்! ஆமென்! அல்லேலூயா!

3. தகர்த்திடு, தடைகளைத் தகர்த்திடு:-

உயிர்த்தெழும் மீட்பரை தடை செய்திட, பெரிய கல் ஒன்று அவரது கல்லறையில் வைக்கப்பட்டது. ''கல்லுக்கு முத்திரை போட்டு, காவல் வைத்து, கல்லறையைப் பத்திரப்படுத்தினார்கள்'' (மத் 27:66) மட்டுமா, காவல் செய்ய காவல் சேவகர் வேறு!

ஆ! என் மீட்பர் வல்லமையாய் உயிர்த்தெழுந்தார்! வாசலிலிருந்த கல் புரட்டி தள்ளப்பட்டது. காவலாளர் திடுக்கிட்டு செத்தவர் போல் விழுந்தார்கள்! மரணமே உன் கூர் எங்கே? பாதாளமே உன் ஜெயம் எங்கே?

உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் வல்லமைக்கு முன் சிறு தடைக்கற்கள் எம்மாத்திரம்? அவரை அடக்கி வைக்க முடியவே முடியாது! என் இயேசு ஒருபோதும் தோல்வியடைந்தவரல்ல! அவர் வெற்றி வேந்தர்! ஜெயக் கிறிஸ்து!

தேவபிள்ளையே, நீ உயிர்த்தெழுந்த வல்லவரில் பெலப்பட முடியாமல் தடுத்துக்கொண்டிருக்கும் தடைக் கற்கள் எவை? உன் சரீர பெலவீனங்களா? குடும்பத்தில் போராட்டங்களா? அல்லது கடன்

சுமையா? எதுவாயிருந்தாலும் கற்களை புரட்டி தள்ளி மகிமையோடு உயிர்த்தெழுந்த மீட்பரிடம் இப்பொழுதே மனம் விட்டுச் சொல்லு! அவர் நிச்சயமாகவே உன்னை வெற்றிச் சிறக்கப் பண்ணுவார்.

கல்லறையண்டை வந்த மகதலேனா மரியாள் எனக்காக யார் அந்தக் கல்லைப் புரட்டித் தள்ளுவார்கள் என்று கலங்கினாள். ஆனால் என்ன ஆச்சரியம்! அங்கே ஏற்கெனவே கல் புரட்டித் தள்ளப்பட்டி ருக்கிறதைக் கண்டாள். ஆம், அவர் உனக்காக யாவையும் செய்து முடிக்கிறவரல்லவா கற்களைப் புரட்ட நினைத்து, உன் குடும்பத்தவரின் உள்ளங்களை மாற்ற நினைத்து சோர்ந்துபோயிருக்கும் தேவ பிள்ளையே, இதோ, கர்த்தர் உன் வாழ்க்கையில் வரும் எல்லா தடைக்கற்களையும் நீக்குகிறார். உயிர்த்தெழுந்த மீட்பர் இதோ, உனக்காக புரட்டித் தள்ளுகிறார்! அல்லேலூயா!

௪. சவால்களை உடைத்தெறிந்திடு:-

ரோம அரசாங்கம் சவால் விட்டது! யூதர்கள் சவால் விட்டார்கள். இயேசு எப்படி உயிர்த்தெழுந்து விடுவார் பார்க்கலாம்! போர் வீரர்களை நிறுத்தினார்கள். தீயின் முன் மெல்லிய நூல் எம்மாத்திரம்? சூரியனைக் கண்ட பனிபோல அவர்கள் ஓடி மறைந்தார்கள்! உயிர்த்தெழுந்த மீட்பர் முன்னால் அவர்களால் நிற்க முடியவில்லை.

ஏறத்தாழ இருநூறு ஆண்டுகளுக்கு முன் செல்வாக்கான சீமாட்டி ஒருத்தி இருந்தாள். அவள் பெயர் அனி கிறிஸ்டம். அவள் ஒரு பெரிய நாத்திகவாதி. தேவன் இல்லை என்று சாதிப்பவள். அப்படியே பிரச்சாரமும் செய்வாள். தான் மரிக்கும்முன் தன் கல்லறையை உறுதியான கருங்கல்லினால் கட்ட வேண்டும் என்றும் அதன்மேல் உயிர்த்தெழுதல் இல்லை என்று எழுதவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டாள். அவள் விரும்பியபடி மிகக்கடினமான கருங்கற்களால் அவள் கல்லறைக் கட்டப்பட்டது. உயிர்த்தெழுதல் இல்லை என்ற வாசகங்கள் செதுக்கப்பட்டது.

தேவன் அந்த சவாலை ஏற்றுக்கொண்டார். அந்தக் கல்லறையை உடைத்துக் கொண்டு ஒரு தேவதாரு மரம் வேகமாக வளர்ந்து உயர்ந்தது. ''உயிர்த்தெழுதல் இல்லை'' என்ற வார்த்தைகள் உடைந்து நொறுங்கியது. இன்று ஆயிரக்கணக்கான மக்கள் ஆச்சரியத்தோடும் துதியோடும் போய் உயிர்த்தெழுதல் உண்டு என்று நம்பித் திரும்பு கிறார்கள். அல்லேலூயா! நம் மீட்பர் உயிரோடிருக்கிறார்!

தேவபிள்ளையே, அன்று யூதர்கள் போர்ச்சேவகர்களை நிறுத்தி கிறிஸ்துவோடு சவால் விட்டதைப் போலவே, இன்றும் உன் குடும்பத்தின் மீது பொறாமை கொண்டு வாழ்ந்து விடுவதைப் பார்க்கலாம் என்று உன் இனத்தவர்களே சவால் விடுகிறார்களோ? மந்திரவாதிகளையும் செம்புத் தகடுகளையும் நிறுத்தி ஏவல் செய்திருக் கிறார்களோ? சொத்துக்களை அபகரிக்கத் திட்டம் தீட்டியிருக்கிறார் களோ? கலங்காதே! இப்பொழுதே உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை சகல தீய சக்திகளுக்கு முன்பும் நிறுத்து. அவர்மேல் மோதுகிறவன் நொறுங்கிப்போவான், அவர் மனித சவால்களை தகர்த்தெறிகிறவர்.

உன்னதமான உயிர்த்தெழுந்த மீட்பரை நீ தாபரமாகக் கொண்ட படியால் வாதை உன் கூடாரத்தை அணுகாது! ஒரு வழியாய் வருவார் கள்; ஏழு வழியாய் ஓடிப்போவார்கள். பிசாசின் கிரியைகளை அழிக்கும்படியாய் வெளிப்பட்ட தேவகுமாரன் உயிர்த்தெழுந்த மீட்பராய், காவல் காத்த போர்வீரர்களை அதமாக்கி, உன் பட்சத்தில் உன்னோடுகூட இருக்கிறார். அல்லேலூயா!

5. அழைத்திடு, வருந்தி அழைத்திடு:-

உயிர்த்தெழுந்த கிறிஸ்து எம்மாவூருக்குப் போன சீஷர்களோடு வழி நடந்து போனார். வேத வாக்கியங்களை விவரித்துக் காண்பித்தார். ஆனால் அவர்களோ அவரை அறியவில்லை. அத்தருணத்தில் தாங்கள் போகிற கிராமத்துக்குச் சமீபமானார்கள் அப்பொழுது அவர் அப்புறம் போகிறவர் போலக் காண்பித்தார் அவர்கள் அவரை நோக்கி, எங்களுடனே தங்கியிரும் என்று வருந்திக் கேட்டுக் கொண்டார்கள். அப்பொழுது அவர் அவர்களுடனே தங்கும்படி உள்ளே போனார் (லூக் *24:29*).

உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை நீ வருந்தி அழைப்பாயானால், அவர் உன்னோடுகூட தங்கியிருப்பார். அவர் ஒருவரையும் கட்டாயப்படுத்து கிறவரல்ல வாசற்படியிலே நின்று தட்டிக்கொண்டே இருப்பார். அவ்வளவுதான் அவர் வாசல்களை உடைத்துக் கொண்டு உள்ளே பிரவேசிக்க விரும்பாமல் நீ அவரை ஆவலோடு அழைப்பாய் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்.

எம்மாவூருக்குப் போன சீஷர்கள் அழைத்தார்கள். அவர் அவர்களோடு உள்ளே போனார். உயிர்த்தெழுந்த மீட்பர், பரலோகத்திற்கு ஏறிப்போகுமுன் நமக்குத் தந்த வாக்குத்தத்தம் என்ன? ''இதோ உலகத்தின் முடிவுபரியந்தமும் சகல நாட்களிலும் நான்

உங்களுடனேகூட இருக்கிறேன்'' (மத். 28:20) என்று உறுதியாய் சொல்லியிருக் கிறாரல்லவா? அப்படியே கூடவே இருப்பார்.

ஒரு பாட்டிலில் வாசனைத் தைலம் இருந்தால் அந்த வாசனை அந்த பாட்டிலுக்குள்ளேயேதான் இருக்கும். ஆனால் அந்த பாட்டில் உடைக்கப்பட்டு தைலம் வெளியே ஊற்றப்படும்பொழுது, அந்த வாசனையினால் வீடு முழுவதும் பரிமளிக்கிறது. நறுமணம் கமழ்கிறது. அதுபோல இயேசு உயிரோடு இருந்தபோது யூதேயாவில் மட்டுமே சஞ்சரித்தார். ஆனால் அவர் கல்வாரியில் உடைக்கப்பட்டு மாம்ச சரீரத்திலிருந்து உயிர்த்தெழும்பினபடியால் உலகம் முழு வதையும் நிரப்பினார். அவரது நாமம் ஊற்றுண்ட பரிமளத் தைலமாயிருக்கிறது. யார், யார் உயிர்த்தெழுந்த மீட்பரை அழைக் கிறார்களோ அவர்களோடெல்லாம் வந்து தங்கும்படி ஆவியும் ஜீவனுமாயிருக்கிறார். அல்லேலூயா!

6. பெற்றிடு வரங்களைப் பெற்றிடு:-

எலியா தீர்க்கதரிசி பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் போது எலிசா ஆவியின் வரத்தை இரட்டிப்பாய் வாஞ்சித்தான். அப்படியே பெற்றுக் கொண்டான்.

இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்து பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்பொழுது பரிசுத்தாவியின் வரத்தை வாக்குத்தத்தம் செய்தார். அப்படியே பொழிந்தருளினார். பரிசுத்தாவியின் வரத்தி லிருந்து ஒன்பது விதமான வரங்கள் சீஷர்களில், திருச்சபையில் கிரியை செய்தது.

கிறிஸ்து பரலோகத்திற்கு ஏறிப்போனபோது பரலோகத்தின் வாசல்கள் திறவுண்டன! சங்கீதக்காரன் தீர்க்கதரிசன கண்களால் ஏறெடுத்துப் பார்த்து, ''வாசல்களே, உங்கள் தலைகளை உயர்த்துங்கள்; அநாதி கதவுகளே, உயருங்கள், மகிமையின் ராஜா உட்பிரவேசிப்பார்'' (சங் 24:9). ஆம், ஆதாமின் பாவத்தால் மூடிக்கிடந்த பரலோக வாசல்கள் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலால் திறவுண்டன! எபேசியர் 4:8-ல் அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார்: ''அவர் உன்னதத்திற்கு ஏறி, சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கி, மனுஷர்களுக்கு வரங்களை அளித்தார்.''

சீஷர்களெல்லாரும் பரிசுத்தாவியின் வல்லமையினாலும், ஆவியின் வரங்களாலும் நிரப்பப்பட்டார்கள். அந்த கிறிஸ்து மாறாதவர். உன்னையும் கூட அவர் ஆவியின் வரங்களாலும், ஆவியின்

கனிகளாலும் முடிசூட்ட விரும்புகிறார். கேள், பெற்றுக்கொள். ஏனெனில் கேட்கிற எவனும் பெற்றுக் கொள்கிறான் என்று வாக்கு மாறாத வேதம் சொல்கிறது!

எனக்குக்கூட வரங்களை கர்த்தர் தருவாரா என்று நீ கேட்கலாம். சங்கீதம் 68:18 வாசித்துப் பார். ''தேவனாகிய கர்த்தர் மனுஷருக்குள் வாசம் பண்ணும் பொருட்டு, துரோகிகளாகிய மனுஷர்களுக்காகவும் வரங்களைப் பெற்றுக் கொண்டீர்'' என்று எழுதப்பட்டிருக்கிறது.

''துரோகிகளாகிய மனுஷர்களுக்காகவும்!'' எத்தனை ஒரு காருண்யமான வார்த்தை! கிறிஸ்துவை மறுதலித்த பேதுருவுக்காகவும், கிறிஸ்துவை விட்டு விட்டு ஓடிப்போன சீஷர்களுக்காகவும், துரோகிகளாகிய எனக்காகவும், உனக்காகவும் உயிர்த்தெழுந்த கிறிஸ்து வரங்களைப் பெற்றிருக்கிறார்! பொழிந்தருளுகிறார்!! அவருடைய அன்பின் உச்சிதத்தை நினைத்து நன்றியோடு கர்த்தரைத் துதிப்போமாக!

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

அத்தியாயம்

3

ஒத்துப்போகாதே உறுதியாய் நில்!

''யெஸ்ரயேலனாகிய நாபோத்துக்கு யெஸ்ரயேலிலே சமாரியாவின் ராஜாவாகிய ஆகாபின் அரண்மனை அண்டையில் ஒரு திராட்சத் தோட்டம் இருந்தது. ஆகாப் நாபோத்தோடே பேசி; உன் திராட்சத் தோட்டம் என் வீட்டிற்கு அடுத்திருக்கிறபடியால், அதைக் கீரைக் கொல்லையாக்கும்படி எனக்குக் கொடு, அதைப் பார்க்கிலும் நல்ல திராட்சத் தோட்டத்தை அதற்குப் பதிலாக உனக்குத் தருவேன்; அல்லது உனக்கு வேண்டுமானால் அதன் விலைக்கிரயமான பணத்தைத் தருவேன் என்றான். நாபோத் ஆகாபை நோக்கி: நான் என் பிதாக்களின் சுதந்தரத்தை உமக்குக் கொடாதபடி கர்த்தர் என்னைக் காப்பாராக என்றான்'' *(1 இராஜா. 21:1-4).*

பேரம்பேசும் ராஜாவாக ஆகாபையும், அதை ஏற்றுக் கொள்ளாத திடமுள்ள ஏழை நாபோத்தையும் பற்றி நாம் இங்கு வாசிக்கிறோம். ஆகாப் சமாரியாவின் பெரிய ராஜாவாயிருந்தபடியினால் அவனுக்கு அதிகாரமும், வல்லமையும், செல்வாக்கும், பணமும் இருந்தது. ஏழையாய் தனி மரமாய் உதவியற்ற நிலையில் இருந்த நாபோத்திடம் அவன் வந்து நாபோத்தின் திராட்சத் தோட்டத்திற்காக விலை பேசினான். உன்னுடைய திராட்சத் தோட்டத்தை எனக்குக் கொடு, அதை நான் கீரைக் கொல்லையாக்க விரும்புகிறேன் என்றான்.

அதற்காக ஆகாப் விலை பேசியது ஏராளமான பணம், அல்லது வேறொரு திராட்சத் தோட்டம். மட்டுமல்ல, ராஜாவுக்கு விற்பதால் ராஜாவின் நட்புறவும், இன்னும் அநேக சிலாக்கியங்களும் கிடைக்கும். அது ஒரு கௌரவமும், மேன்மையும் கூட! இந்த ஒரு திராட்சத் தோட்டத்தை ராஜாவுக்கு விற்பதால் வரும் பணத்தில் இன்னும் அநேக திராட்சைத் தோட்டங்களையும் கூட வாங்கி விடலாம். எப்படியும் இலாபமானதுதான்!

ஆனால் நாபோத் ஆகாப் ராஜாவைப் பார்த்து, ''நான் என் பிதாக்களின் சுதந்தரத்தை உமக்குக் கொடாதபடி கர்த்தர் என்னைக் காப்பாராக!'' என்றான். நாபோத் அந்த விலைக் கிரயத்திற்கோ, அல்லது

வேறு திராட்சத்தோட்டத்திற்கோ இணங்கவில்லை இவன் எண்ண மெல்லாம், ''இது என் பிதாக்களின் சுதந்திரம்'' என்பதிலேயே இருந்தது. அல்லேலூயா!

அநேக வேளைகளில் நம்மிடம் பேரம் பேசுவதற்கு இவ்வுலகத்தின் அதிபதியான சாத்தான் வருவதுண்டு. நம்முடைய ஆசீர்வாதங்கள், மேன்மைகளுக்கு ஈடாக அவன் உலக செல்வங்களையும், செல்வாக்குகளையும் கொண்டு வந்து காட்டுவான். அவனோடு ஒத்துப்போவதற்கு உனக்கு ஆலோசனை சொல்லக்கூடிய ஏராளமான மக்களையும் அவன் வைத்திருப்பான். ஆகாபைப் பார்க்கிலும் இன்னும் எத்தனையோ மடங்கு தந்திரமாக உலகத்தின் மேன்மைகளையெல்லாம் அருமையாக சொல்லி வர்ணிப்பான். ஆனால் தேவனுடைய பிள்ளையே, அதற்காக ஒரு போதும் உன் ஆவிக்குரிய ஜீவியமாகிய திராட்சத்தோட்டத்தை இழந்து போகாதே!

நாபோத்தினுடைய தோட்டம், முற்பிதாக்களின் சுதந்திரமாகிய திராட்சத் தோட்டம்! அதை ஆகாப் கீரைக் கொல்லையாக்க விரும்பினான்! திராட்சத் தோட்டத்தைப் பாதுகாத்து வளர்க்க நாபோத் எவ்வளவு பாடுபட்டிருப்பான். மிகவும் கண்காணிப்பு, உரம், தண்ணீர், கிளை நறுக்குதல், படர வழி செய்தல் இத்தனையும் இருந்தால் தான் திராட்சச் செடி வளர்ந்து கனி கொடுக்கும் திராட்சச் செடியை ஒரு குழந்தையை வளர்ப்பது போல வளர்க்க வேண்டும். ஆனால் கீரைக் கொல்லை அப்படியல்ல, சும்மா நட்டு வைத்தால் போதும். காட்டுச் செடி போல வளரும். அது படருவதில்லை. கனி கொடுப்பதில்லை. திராட்சயைப் போல அழகோ, ருசியோ இருப்பதில்லை. நாபோத்தின் திராட்சத் தோட்டத்தை ஆகாப் கீரைக் கொல்லையாக்க நினைப்பது எவ்வளவு அக்கிரமமான செயல்!

திராட்சத் தோட்டத்தைப் போல இனிமையாகவும் அநேகருக்கு பிரயோஜனமாயிருந்த விசுவாசிகளை, ஊழியர்களை சாத்தான் கீரைக் கொல்லையாக்கிப் போட்டிருப்பது எத்தனை வேதனையானது! உன் ஆதி அன்பு எங்கே? உன் ஆதி பரிசுத்தம் எங்கே? உன் வரங்கள், தாலந்துகள் எங்கே? ஆகாபின் நய வஞ்சக வார்த்தையில் மயங்கி கீரைக் கொல்லையாய், யார் வேண்டுமானாலும் கிள்ளக்கூடிய அளவில் தாழ்ந்து போனாயோ? கர்த்தர் உன்னை நற்குல திராட்சச் செடியாக நாட்டியிருக்க, நீ கீரைச் செடியாக மாறிப் போக விரும்புகிறதென்ன?

எங்கள் ஊர் அருகே இரட்சண்ய பாடசாலை ஒன்று பல ஆண்டு காலமாக இயங்கி வந்தது. தினமும் காலையில் அருமையான, அழகான

தெய்வீகப் பாடல்களை பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுத்து, பிள்ளைகளை தேவ பக்தியுள்ளவர்களாக்கினார்கள். காலம் கடந்தது, ஆகாப் விலை பேச வந்தது போல இந்து முன்னணி இயக்கத்தார் அந்தப் பள்ளிக்கூடத்தை விலை பேச வந்தனர். மிகப் பெரிய தொகையை வாக்களித்தபோது, அந்த நிர்வாகத்தார் மயங்கி விட்டனர். பரலோகத்தில் கிடைக்கப்போகும் மேன்மைகளை அற்ப உலகப் பணத்திற்காக விற்றுப் போட்டனர். இன்று அந்த இரட்சண்ய பாடசாலையின் நிலை முற்றிலும் கிறிஸ்துவுக்கு எதிரானதாக மாறிப் போனது! எவ்வளவு பரிதாபம்! திராட்சத் தோட்டம் கீரைக் கொல்லையாய் மாறிப் போனது!

ஆகாபைப் போல பணத்தையும், அதிகாரத்தையும், செல்வாக்கு களையும் கொண்டு நய வஞ்சகமான வார்த்தைகளோடு அநேகர் உன்னிடத்தில் வருவார்கள். தேவபிள்ளையே, உன் சுதந்திரத்தின் மேல் கண்ணும் கருத்துமாயிரு. ஒரு கிறிஸ்தவ வாலிப சகோதரி எழுதினாள். ஐயா, என்னிடத்தில் அன்பு வார்த்தைகளைப் பேசி ஒரு வாலிபன் வந்தான் என் அழகைப் புகழ்ந்தான் உன் சிரித்த முகத்தின் அருகிலேயே இருக்க விரும்புகிறேன் என்றான். நீ என்னை நேசிக்காவிட்டால் நான் தற்கொலை செய்து கொள்வேன் என்றான். அதை நம்பி நான் அவனிடம் பழகினேன். அவன் என் கற்பை சூறையாடின பின் என்னை வெறுத்து விட்டுப் போய்விட்டான். விலையேறப் பெற்ற என் கற்பு வீணாய் போனது என்று எழுதினாள் எவ்வளவு பரிதாபம். கணவனுக்கு மாத்திரமே கிடைக்க வேண்டிய விலையேறப்பெற்ற கற்பின் தூய்மை யான வாழ்க்கை, நயவஞ்சக வார்த்தைகளுக்கு இணங்கியபடியால் கீரைக் கொல்லையாகிப் போய்விட்டது! பேரம் பேச வரும் ஆகாபுகள் ஜாக்கிரதை!

ஏசாவுக்கு முற்பிதாக்களின் சுதந்திரத்தின் அருமை தெரியவில்லை. அற்ப கூழுக்காக, ஒரு நேர போஜனத்திற்காக தன் விலையேறப்பெற்ற சேஷ்ட புத்திரபாகத்தை விற்றுப்போட்டான். வேதம் சொல்கிறது: "பிற்பாடு அவன் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ள விரும்பியும் ஆகாதவனென்று தள்ளப்பட்டதை அறிவீர்கள்; அவன் கண்ணீர்விட்டு, கவலையோடே தேடியும் மனம் மாறுதலைக் காணாமற்போனான்" (எபி 12:17).

ஆகாபின் ஆதிக்கம் இன்றும் இருக்கிறது. அரசாங்கம் கிறிஸ்தவர் களிடம் பேரம் பேசுகிறது. நீ கிறிஸ்தவ மார்க்கத்தை விட்டு விட்டால், உனக்கு ஸ்காலர்ஷிப் கிடைக்கும். மருத்துவக் கல்லூரியில் இடம்

கிடைக்கும். வேலை எளிதாய் கிடைக்கும் என்று சலுகைகளைக் காட்டுகிறது. அரசாங்க மந்திரி ஒருவர் குறிப்பிட்டார் ஒவ்வொரு ஆண்டும் அரசாங்க சலுகைகளுக்காக கிறிஸ்தவர்களிலிருந்து இந்துக்களாய் மாறுகிறவர்கள் பத்தாயிரத்திற்கும் அதிகமான பேர் என்றார். இப்படி பரலோக சுதந்திரங்களை பணத்திற்காக விற்றுப் போடுகிறவர்கள், தங்கள் பூமிக்குரிய வாழ்க்கைக்கு பின்பு எங்கே போய் நிற்பார்கள்?

ஆகாப் ஆசை வார்த்தைகளைப் பேசியபோது நாபோத் மதி மயங்கி நிற்கவில்லை! தன்னோடு பேசுகிறவர் ராஜா அல்லவா என்று இணங்கவில்லை! உறவினரிடம் போய் ஆலோசனை கேட்கவும் விரும்பவில்லை! உடனே உறுதியாகச் சொன்னான், ''இது என் முற்பிதாக்கள் எனக்குக் கொடுத்தச் சுதந்திரம். இதை நான் விற்கவே மாட்டேன். என் பிதாக்களின் சுதந்திரத்தை உமக்குக் கொடுக்காதபடி கர்த்தர் என்னைக் காப்பாராக'' என்றான்.

அநேகருக்கு ''பிதாக்களின் சுதந்திரத்தைக்'' குறித்த அறிவோ, வைராக்கியமோ இல்லை இது எத்தனை வேதனையானது! ஆனால் நாபோத் சொல்கிறான், இது என் முற்பிதாக்கள் இந்த கானான் தேசத்திற்குள் வந்தபோது, இந்த சுதந்திரத்தைப் பெறுவதற்கு உயிரைப் பணயம் வைத்து போராட வேண்டியதிருந்தது. ஏழு ஜாதியினர், முப்பத்தொரு இராஜாக்களிடம் யுத்தம் செய்யவேண்டியதிருந்தது. திரளான இரத்தம் சிந்தி என் முற்பிதாக்கள் இந்தச் சுதந்திரத்தை எனக்குப் பெற்றுத்தந்தார்கள். இந்தச் சுதந்திரம் தலைமுறை தலைமுறையாக என் பிள்ளைகளுக்குச் செல்ல வேண்டியது. நான் இதை விற்கவே மாட்டேன்.''

அருமையான தேவனுடைய பிள்ளையே, நம்முடைய அருமையான இரட்சகர் இயேசுகிறிஸ்து சிலுவையிலே நமக்கு ஒரு பெரிய சுதந்திரத்தைப் பெற்றுத் தந்தார். அந்த கல்வாரிப் போர்தனில், ஒருவராய், தனியராய் நின்று தன் இரத்தத்தின் கடைசித் துளியையும், ஜீவனையும் ஊற்றி, சத்துருவின் சகல வல்லமைகளையும் ஜெயித்து பரலோக சுதந்திரங்களைப் பெற்றுத் தந்தார். வேதம் சொல்கிறது, ''அவர் மரணமடைந்து, அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம்பண்ணப் பட்ட நித்திய சுதந்தரத்தை அடைந்துகொள்வதற்காக, புது உடன் படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார்'' (எபி 9:15).

கவனியுங்கள், ''நித்திய சுதந்திரம்'' என்று வேதம் சொல்கிறது. இந்த நித்திய சுதந்திரத்தை இயேசு கிறிஸ்து தம்முடைய விலையேறப்

பெற்ற இரத்தத்தினால் சம்பாதித்தார் (1 பேதுரு 1:19). விற்றுப்போடு வதற்கு இது விளையாட்டுப் பொருளல்ல. அநித்தியமான பாவ சந்தோஷங்களைக் காட்டி விலை பேச வரும் ஆகாபோடு எதிர்த்து நில்லுங்கள். எகிப்தின் பொக்கிஷங்களோ, பேரோ, புகழோ வேண்டாம். பிதாக்களின் சுதந்திரங்கள் மேல் கருத்தும் ஜாக்கிரதையு முள்ளவனுமாயிரு.

பிதாக்களின் சுதந்திரம் விற்கப்படக்கூடாது என்று வேதம் சொல்கிறது. எண்ணாகமம் 36:7 சொல்கிறது: ''இஸ்ரவேல் புத்திரர் அவரவர் தங்கள் தங்கள் பிதாக்களுடைய கோத்திரத்தின் சுதந்தரத்திலே நிலை கொண்டிருக்கவேண்டும்'' இஸ்ரவேல் புத்திரரின் சுதந்திரம் ஒரு கோத்திரத்தி லிருந்து இன்னொரு கோத்திரத்திற்குச் செல்லுவதைக்கூட கர்த்தர் விரும்பவில்லை. பிதாக்களின் சுதந்திரத்தைக் குறித்த அநேக சட்டதிட்டங்களை கர்த்தர்தாமே போதித்திருக்கிறார். எண் 21:8; 33:54; 36:7, உபாகமம் 21:6, ஏசா 36:16 ஆகிய வசனங்களில் வாசிக்கலாம். இதெல்லாம் ராஜாவாகிய ஆகாபுக்குத் தெரியாததல்ல. ஆனாலும் தந்திரமாக அவ்வளவு விலையேறப் பெற்றதும், கர்த்தரால் கட்டளை யிடப்பட்டதுமான அந்த சுதந்திரத்தைக் கேட்கும்படியாகப் புறப்பட்டு வந்து விட்டான்.

தேவபிள்ளையே, அந்த கானான் தேசத்தின் சுதந்திரத்தைப் பார்க்கிலும், மிக மிக மேன்மையான ஆவிக்குரிய சுதந்திரங்கள் நமக் குண்டு என்பதை மறந்து போகாதே!. பிதாவாகிய தேவன் நித்திய காலமாய் வைத்திருக்கும் மகிமையான சுதந்திரங்கள் நமக்குண்டு. நம் அருமை இரட்சகர் தன் ஜீவனைக் கொடுத்து சிலுவையிலே சம்பாதித்த சுதந்திரங்கள் நமக்குண்டு. ஆவியானவர் கிருபையாய்த் தந்திருக்கும் வரங்களும், கனிகளுமாகிய சுதந்திரங்கள் நமக்குண்டு.

1. பரிசுத்தவான்களின் சுதந்திரம்:-

அப்போஸ்தலனாகிய பவுலை கர்த்தர் அழைத்தபோது, அவருக்கு பரிசுத்தவான்களின் சுதந்திரத்தை வாக்குப்பண்ணினார். ''என்னைப் பற்றும் விசுவாசத்தினாலே பாவ மன்னிப்பையும் பரிசுத்தப்பட்ட வர்களுக்குறிய சுதந்தரத்தையும் பெற்றுக்கொள்ளும்படியாக,... உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன்'' என்றார் (அப். 26:18). ஆம், அப்போஸ்தலனாகிய பவுலுக்கு அந்த பரம தரிசனம், பரிசுத்த வான்களின் சுதந்திரமாகவே இருந்தது அதைக் குறித்து அகிரிப்பா ராஜா முன் அவர் வெட்கப்படவில்லை. அந்த பரிசுத்தவான்களின் சுதந்தி ரத்தைப் பறிக்க பவுலுக்கு எத்தனையோ சோதனைகள், உபத்திர

வங்கள், வியாகுலங்கள், துன்பங்கள், பசி, நிர் வாணம், நாசமோசம், பட்டயம் எல்லாம் வந்தும், கடைசியில் சிறைச்சேதம் பண்ணப்படும் நிலை வந்தும் அவரது சுதந்திரம் பறிபோகவில்லை. ஆயிரம் ஆகாபின் ஆவிகள் கிரியை செய்தும் அவர் விசுவாசத்தைக் காத்துக்கொண்டு, ஓட்டத்தை முடித்தார். ஆகவே அவர் மார்தட்டி 'நீதியின் கிரீடம்' எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது என்று முழங் கினார் (2தீமோ. 4:7,8) அல்லேலூயா!

மட்டுமல்ல, கொலோசெயருக்கு அப். பவுல் எழுதும் போது, ''ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு, நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கின... பிதாவை ஸ்தோத்தரிக்கிறேன்'' என்று துதித்து மகிழ்கிறார் (கொலோ 1:12).

தேவபிள்ளையே, உனக்கு முன்பாக அநேக கர்த்தருடைய தாசர்கள் இந்த ஓட்டத்தை வெற்றியாக ஓடி முடித்து பரலோக ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொண்டிருக்கிறார்கள்! ஞானவான்கள் ஆகாய மண்டலத்தின் ஒளியைப் போல பிரகாசிப்பார்கள் என்று வேதம் சொல்லுகிறது (தானியேல் 12:3).

2. வாடாத சுதந்திரம்:-

நமக்குப் பரிசுத்தவான்களின் சுதந்திரம் மட்டுமல்ல, கிறிஸ்து தாமே சம்பாதித்த வாடாத சுதந்திரமும் உண்டு. அல்லேலூயா! அப். பேதுரு எழுதுகிறார், ''இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்த தினாலே, அழியாததும், மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின் படியே, நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்'' (1 பேதுரு 1:4).

உலக ஆகாபாகிய சாத்தான், இவ்வுலகத்தின் அழியக்கூடிய பொருட்களை வைத்தே விலைபேச வருவான். அவனிடம் நித்தியமான மேன்மை ஒன்றுமில்லையே. நமது சுதந்திரமாகிய இயேசுவோ நமக்கு அழியாத, மாசற்ற வாடாத சுதந்திரத்தை சிலுவையிலே அன்போடு சம்பாதித்து, கிருபையாய்த் தந்தருளினார். எவ்வளவு மேன்மை!

3. முற்பிதாக்களின் சுதந்திரம்:-

நாம் கிறிஸ்துவின் குடும்பத்திற்குள் வரும்போது முற்பிதாக்களின் சகல சுதந்திரங்களுக்கும் பங்குள்ளவர்களாகிறோம். விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாமின் அத்தனை ஆசீர்வாதங்களும் நமக்குரியது. தியானப் புருஷனாகிய ஈசாக்கின் முழு ஆசீர் வாதங்களும் நமக்குரியது.

கர்த்தரோடு போராடி மேற்கொண்ட தேவபிரபுவாகிய யாக்கோபின் ஆசீர்வாதங்கள் அனைத்தும் நமக்குண்டு. மட்டுமல்ல, நம் அருமை இரட்சகர் உன்னதத்திற்குரிய சகல ஆசீர்வாதங்களினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார். ஆ! எவ்வளவு மேன்மை! தாவீது ராஜாவின் அனுபவங்களை வாசித்துப் பாருங்கள் அவர் முற்பிதாக்களின் சுதந்திரங்களையெல்லாம் தனதாக்கிக் கொண்டார். முழு கானான் தேசத்தையும் பிடித்து வெற்றி சிறந்தார். ''உமது நாமத்திற்குப் பயப்படுகிறவர்களின் சுதந்திரத்தை எனக்குத் தந்தீர்'' என்று கூறி (சங் 61:5) அதை சுதந்தரித்துக் கொண்டார். மட்டுமல்ல, ''உம்முடைய சாட்சிகளை நித்திய சுதந்தரமாக்கிக்கொண்டிருக்கிறேன், அவைகளே என் இருதயத்தின் மகிழ்ச்சி'' (சங் 119:111) என்று குறிப்பிடுகிறார். தேவபிள்ளையே, முற்பிதாக்களின் சுதந்திரங்களை உரிமையோடு சுதந்தரித்துக்கொள்.

முற்பிதாக்களின் சுதந்திரத்திற்காக தைரியமாய்ப் போராடினான் நாபோத்! அதற்காக அவன் பட்ட பாடுகள் கொஞ்சமல்ல. நாபோத் திராட்சத் தோட்டத்தை தரவில்லை என்பதற்காக பழிவாங்க ஆகாபின் மனைவியாகிய யேசபேல் எழுந்தாள். பெரிய ராஜா, ராணியின் கோபாக்கினைக்கு ஆளாகின போதிலும் நாபோத்தின் உள்ளம் முற்பிதாக்களின் சுதந்திரத்திலேயே இருந்தது.

ஆகாபின் மனைவியாகிய யேசபேல் பட்டணத்தில் இருக்கும் மூப்பர்களுக்கு நிருபங்களை எழுதினாள். பொய் சாட்சிச் சொல் வதற்காக மனுஷரை ஏற்படுத்தும்படி அவள் கட்டளை யிட்டிருந்தாள். மூப்பர்களெல்லாரும் நாபோத்திடம் வந்து, ''காரியம் தலைக்கு மேலாகப் போகிறது திராட்சத் தோட்டத்தைக் கொடுத்துவிடு'' என்று வற்புறுத்தியிருந்தார்கள். ஆனால் நாபோத்தின் கண்களில், பிதாக்களின் சுதந்திரத்தைப் பற்றிய மேன்மையான தரிசனம் இருந்தது. அவன் ஒத்துப்போகவில்லை. உறுதியாய் நின்றான்.

உபவாசம் என்று மூப்பர்கள் அறிவித்து, நாபோத்தையும் அவன் அருமை பிள்ளைகளையும் ஊருக்கு வெளியே அழைத்துப் போனார் கள். ஊருக்கு உள்ளே கல்லெறிந்தால் யாராவது அவனுக்கு உதவி செய்ய வரக்கூடும் என்று எண்ணினார்கள் போலும். ஆகவே வெளியே வந்ததும் அவன்மேல் பேலியாளின் மக்கள் பொய் குற்றம் சுமத்தினார் கள் இவன் தேவனையும் ராஜாவையும் தூஷித்தான் என்றார்கள்.

நாபோத் மாத்திரம் கல்லெறியப்படவில்லை. அவனது ஒவ்வொரு குமாரர்களும் கல்லெறியப்பட்டார்கள் (2 இராஜா 9:26). ஒவ்வொரு

பிள்ளையும் தன் கண்களுக்கு முன் கல்லெறியுண்டு கதறி அழுவதையும், இரத்தம் பீறிட்டுப் பாய்வதினால் துடிக்கும் வேதனையையும் அவன் கண்டான். குடும்பமாக கல்லெறியுண்ணப்பட்ட வேளையிலும் அவன் தன் சுதந்திரத்தை விட்டுக் கொடுக்கவில்லை.

அவன் கிறிஸ்துவுக்கு நிழலாட்டமானவன். கிறிஸ்துவோடு பேரம் பேச வந்த சாத்தான், அவருக்கு உலக ராஜ்யங்களையும், மகிமையையும் காண்பித்தான். ஆனால் கிறிஸ்துவோ ஒத்துப் போகவில்லை! சிலுவையில் எத்தனை கோரமான மரணத்தை அவர் சந்திக்க வேண்டியதாயிற்று அவருக்கு விரோதமான பொய் சாட்சிகள், கொடூர சவுக் கடிகள், முள்முடி, பரியாசம் அவற்றின் மத்தியிலும் அவர் சுதந்திரத்தை இழந்து போகவில்லை.

தேவபிள்ளையே, அந்த இயேசுவுக்காக தைரியமாய் நில்! உலகத்தோடு ஒத்துப்போகாதே! நீ வேறு பிரிக்கப்பட்ட பரிசுத்த ஜாதி என்றும் உனக்காக மகிமையான சுதந்திரம் வைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் மறந்து போகாதே!

எபிரெயர் *11:35-38* வரையுள்ள விசுவாச வீரர்களைப் பற்றி வாசித்துப்பார்! அவர்கள் ''மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு, விடுதலைபெறச் சம்மதியாமல், வாதிக்கப்பட்டார்கள்'' *(எபிரெயர் 11:35).* காரணம் என்ன? அவர்கள் கண்கள் மேலான சுதந்திரத்திலேயே வைக்கப்பட்டிருந்தது. ஆகவே அவர்கள் நிந்தைகளையும், அடிகளையும், கட்டுகளையும், காவலையும் அனுபவித்தார்கள் கல்லெறியுண்டார்கள்; வாளால் அறுப்புண்டார்கள்... (எபி *11:36,37).* வேதம் சொல்லிக்கொண்டே போகிறது!

தேவபிள்ளையே, இக்காலத்துப் பாடுகள் இனி உன்னில் வெளிப்படப்போகும் மகிமைக்கு ஒப்பானவையல்ல. எனவே, அதைரியப்படாதே; சோர்ந்துபோகாதே; உன் சுதந்திரம் பெரியது! விசுவாச துரோகம் பெருகியுள்ள நாட்களில் வந்திருக்கிறோம். கிறிஸ்தவ மார்க்கம் விலையாகிக் கொண்டிருக்கும் இந்த வேளையில் நீ சத்தியத்திற்காக வைராக்கியமாய் நில் ஆவியில் பெலன் கொள், முற்பிதாக்களின் சுதந்திரத்தைப் பற்றிய தரிசனம் எப்பொழுதும் உன் கண்களில் இருக்கட்டும்!

உலகத்தோடு ஒத்துப்போகாதே! கர்த்தருக்காக உறுதியாக நில்!

அத்தியாயம்

4

பெற்றுக்கொள், இரட்டிப்பான நன்மைகள்!

''நம்பிக்கையுடைய சிறைகளே, அரணுக்குத் திரும்புங்கள்; இரட்டிப்பான நன்மையைத் தருவேன், இன்றைக்கே தருவேன்'' *(சகரியா 9:12)*.

ஒரு கூட்டத்தில் ஒரு பிரசங்கியார் தேவன் அருளும் நன்மைகளைப் பற்றிப் பிரசங்கித்துக் கொண்டிருந்தார். திடீரென தன் பாக்கெட்டி லிருந்து ஆயிரம் ரூபாய்களை எடுத்தார். யாருக்கு இந்தப் பணம் வேண்டும் என்று கேட்டார்.

எல்லோரும் ஆச்சரியத்தோடு பார்த்தார்கள் இவர் எங்கே கொடுக்கப் போகிறார் என்று சிலர் நினைத்தார்கள். சிலர், இவர் கேலி செய்து ஏமாற்றுகிறார் என்று நினைத்தார்கள். சிலர் இவருடைய கைகளில் எப்படி ஆயிரம் ரூபாய் வந்தது என்று கணக்கு போட்டார்கள். ஆனால் ஒரு சிறுவனோ உடனே எழுந்து எனக்குக் கொடுங்கள் என்று கேட்டான். எல்லோருக்கும் ஒரே ஆச்சரியம்! அந்த பிரசங்கியார் உடனே அதைக்கொடுத்து விட்டார். அதன் பின்புதான் ஒவ்வொருவரும் ஐயோ நான் கேளாமற் போனேனே என்று வருந்தினார்கள்.

நம் ஆண்டவர் பொய்யுரையாத தேவன். மனம் மாற அவர் ஒரு மனிதனல்ல; அவர் சொல்லியும் செய்யாதிருப்பவருமல்ல அவர் உங்களோடு சொல்லுகிறார்: ''இரட்டிப்பான நன்மையைத் தருவேன்.'' பெற்றுக் கொள்ள ஆயத்தமா?

1. ஆபிரகாமுக்கு இரட்டிப்பான நன்மை:-

கர்த்தர் ஆபிரகாமை ஆசீர்வதிக்கும்போது இரட்டிப்பாக ஆசீர் வதித்தார். அவன் சந்ததியை கடற்கரை மணலைப் போலஆசீர்வதித்தது மட்டுமல்ல, வானத்து நட்சத்திரங்களைப் போலவும் ஆசீர்வதித்தார். ஒன்று பூமிக்குரிய ஆசீர்வாதம் மற்றது ஆவிக்குரிய ஆசீர்வாதம். ஒன்று மாமிசத்திற்குரிய இஸ்ரவேலர். மற்றது கிறிஸ்துவின் சந்ததியான ஆவிக்குரிய இஸ்ரவேலர். விசுவாச மார்க்கத்தார் யாவரும் ஆபிரகா முக்குள் ஆசீர்வதிக்கப்படுவார்கள். அல்லேலூயா! காரணம் என்ன? கர்த்தர் ஆபிரகாமுக்குள் விசுவாசத்தைக் கண்டார், ''நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும்

விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ'' (ஆதி. 12:1) என்று கர்த்தர் சொன்ன உடனே ஆபிரகாம் விசுவாசத்தோடு புறப்பட்டபடியால் இரட்டிப்பான நன்மைகளைப் பெற்றுக்கொள்ள பாத்திரவானாக இருந்தார்.

தேவபிள்ளையே, பாவத்தைவிட்டுப் புறப்பட ஆயத்தமா? பாரம் பரியங்களை விட்டுப் புறப்பட ஆயத்தமா? கிறிஸ்துவோடு பாடு அனுபவிக்க ஆயத்தமா? ''உன் ஜனத்தையும் உன் தகப்பன் வீட்டையும் மறந்துவிடு. அப்பொழுது ராஜா உன் அழகில் பிரியப்படுவார்'' (சங் 45:10,11).

2. யாக்கோபுக்கு இரட்டிப்பான நன்மைகள்:-

இரட்டிப்பான நன்மைகளை தன் விடாமுயற்சியாலும் மன்றாட்டி னாலும் பெற்றுக் கொண்டவர் யாக்கோபு! அவருக்கு சேஷ்டபுத்திர ஆசீர்வாதம் மட்டுமல்ல, தன் தகப்பனுடைய விசேஷ ஆசீர்வாதங் களும் கிடைத்தன. அவரது அண்ணனாகிய ஏசா வருத்தமுடன் இரண்டு முறை என்னை மோசம் போக்கினான் என்று இழந்த ஆசீர்வாதங் களுக்காக ஏங்கினான் (ஆதி 27:36). யாக்கோபின் கண்கள் ஆசீர் வாதத்தைப் பெற்றுக் கொள்வதிலேயே இருந்தது. ''நீர் என்னை ஆசீர் வதித்தாலொழிய உம்மைப் போகவிடேன்'' என்று கர்த்தரிடம் மன்றாடி னார். அழுது கெஞ்சினார். அவன் ஜெபத்தைக் கேட்ட கர்த்தர் நீ ''தேவனோடும், மனிதரோடும் போராடி மேற்கொண்டாயே என்றார்'' (ஆதி 32:26,28).

இரட்டிப்பான நன்மைகளைப் பெற தேவனிடம் கேள். விடாமல் மன்றாடு. பரலோக ராஜ்யம் பலவந்தம் பண்ணப்படுகிறது; பலவந்தம் பண்ணுகிறவர்கள் அதைப் பிடித்துக் கொள்கிறார்கள்.

3. யோசேப்புக்கு இரட்டிப்பான நன்மைகள்:-

யோசேப்புக்கு இரண்டு பங்கு உண்டு (எசேக் 47:13) யோசேப்பு தன் தகப்பனாலும் கர்த்தராலும் மிகவும் நேசிக்கப்பட்டவனாக இருந் தான். யாக்கோபு யோசேப்பை ஆசீர்வதிக்கும்போது மூன்று மடங்கு ஆசீர்வாதத்தால் ஆசீர்வதித்தார். ''அவர் உயர வானத்திலிருந்து உண்டாகும் ஆசீர்வாதங்களினாலும், கீழே ஆழத்தில் உண்டாகும் ஆசீர் வாதங்களினாலும், ஸ்தனங்களுக்கும் கர்ப்பங்களுக்கும் உரிய ஆசீர் வாதங்களினாலும் உன்னை ஆசீர்வதிப்பார்'' (ஆதி 49:25).

காரணம் என்ன? யோசேப்புக்கு நன்மைகள் பல மடங்கு வந்ததின் இரகசியம் என்ன? அவர் தன் பரிசுத்தத்தை உத்தமத்தோடு பாதுகாத்துக்

கொண்டதுதான் (1 நாளா 5:1). யோசேப்பு குழியில் போடப்பட்ட போது எரிச்சலோ கோபமோ அடையாமல் பரிசுத்தத்தைப் பாது காத்தார்! போத்திபாரின் மனைவி இழுத்தபோது கர்த்தருக்கு விரோத மாகப் பாவஞ் செய்வது எப்படி என்று பாவத்திற்கு விலகியோடி பரிசுத்தத்தை பாதுகாத்தார்! எகிப்திலே மிகவும் அதிகமாய் உயர்த்தப் பட்டபோது பெருமையோ, வேற்றுமையோ வந்து விடாமல் பரிசுத் தத்தைக் காத்துக் கொண்டார்! தேவபிள்ளையே, பரிசுத்தத்தின் மேல் வைராக்கியமாயிரு! கர்த்தர் பரிசுத்தராயிருக்கிறது போல உன் எல்லா செய்கைகளிலும், பேச்சிலும், நடையுடையிலும் பரிசுத்தமாயிரு இரட்டிப்பான நன்மைகளைப் பெறுவாய்!

4. யோபுவுக்கு இரட்டிப்பான நன்மைகள்:-

''யோபுக்கு முன் இருந்த எல்லாவற்றைப் பார்க்கிலும் இரண்டத் தனையாய்க் கர்த்தர் அவனுக்குத் தந்தருளினார்'' (யோபு 42:10). யோபு இரட்டிப்பான நன்மைகளுக்கும் ஆசீர்வாதங்களுக்கும் பாத்திர வானானார். காரணம் என்ன?

பாடுகளின் நேரத்தில் அவர் காண்பித்த பொறுமை! (யாக் 5:13). சோதனைகளை மகிழ்ச்சியோடு சந்தித்த அடக்கம்! தன் பிள்ளைகள் மரித்தபோது கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார் அவருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம் என்று கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்து துதித்தார். கர்த்தருடைய கைகளில் நன்மைபெற்ற நாம் தீமையையும் அனுபவிக்க வேண்டாமோ என்ற தாழ்மை! தன் சிநேகிதருக்காக வேண்டுதல் செய்யும் ஜெப ஜீவியம் (யோபு 42:10). இவையெல்லாம் யோபுவுக்கு இரட்டிப்பான நன்மைகளைப் பெற்றுத் தந்தது!

5. அன்னாளுக்கு இரட்டிப்பான நன்மைகள்:-

''அன்னாளைச் சிநேகித்தபடியினால் அவளுக்கு இரட்டிப்பான பங்கு கொடுப்பான்'' (1 சாமு 1:5) அன்னாள் நேசிக்கப்பட்டவள்; அவளுடைய சக்களத்தி அவளுடைய குறையை குற்றப்படுத்தி, குத்திக் காட்டியபோது அவள் தன் ஆறுதலின் இடமாக கர்த்தரின் பாதத்தையே தெரிந்து கொண்டாள். கர்த்தர் அவளுக்கு ஆசீர்வாதமான சாமுவேலை மட்டுமல்ல; இன்னும் ஐந்து பிள்ளைகளைப் பெறும் பாக்கியத்தையும் கொடுத்தார்.

கர்த்தர் இரட்டிப்பான நன்மைகளைத் தருவார்! நம்பிக்கையுள்ள சிறைகளே, அரணாகிய கிறிஸ்துவண்டை திரும்புங்கள், உங்களை ஆசீர்வதிக்கும் இரட்சகரிடம் திரும்புங்கள். இரட்டிப்பான நன்மை களைத் தருவார்! ஆமென் அல்லேலூயா!

அத்தியாயம்
5

நிரம்பி வழியட்டும்!

நிரம்பி வழியும அனுபவம் உங்களுக்கு உண்டா?

மழைக் காலங்களில் பெய்த பெருமழையின் காரணமாக ஆற்றிலே வெள்ளம் பெருக்கெடுத்து குளங்களை எல்லாம் நிரப்பும். நிரம்பிய குளங்களைச் சுற்றிலும் பச்சைப் பசேலென்ற செழுமை, காணுமிடங் களெல்லாம் அழகிய மலர்கள், பலநிற வண்ணத்துப் பூச்சிகள்! நிரம்பிய குளத்தில் குதித்து மகிழும் மீன்களும் விடாமல் சத்தமிடும் தவளையின் குரல்களும் நம்மைப் பரவசப்படுத்தும்! நம் உள்ளத்தைக் களிப்பூட்டும்.

அதைவிட ஆயிரம் ஆயிரம் மடங்கு இனிமையான அனுபவம் நம் உள்ளங்களெல்லாம் பரிசுத்த ஆவியினால் நிரம்பி வழிவதுதான்! இது பின்மாரியின் காலம்! கர்த்தர் பின்மாரி மழையைத் தாகமுள்ள யாவர் மேலும் ஊற்றிக்கொண்டே இருக்கிறார். கிறிஸ்துவின் வருகைக் கென்று ஒரு கூட்டம் ஜனங்களை மாசற்ற மணவாட்டியாக மறுரூபப் படுத்துவதற்காக தேவன் ஆவியின் பின்மாரியை ஊற்றிக்கொண்டே யிருக்கிறார். இந்தக் காட்சியை உன்னதப்பாட்டு அழகாக சித்தரிக்கிறது.

''இதோ, மாரிக்காலம் சென்றது, மழைபெய்து ஒழிந்தது. பூமியிலே புஷ்பங்கள் காணப்படுகிறது; குருவிகள் பாடுங்காலம் வந்தது, காட்டுப்புறாவின் சத்தம் நமது தேசத்தில் கேட்கப்படுகிறது. அத்தி மரம் காய் காய்த்தது; திராட்சக்கொடிகள் பூப்பூத்து வாசனையும் பரிமளிக்கிறது; என் பிரியமே! என் ரூபவதியே! நீ எழுந்துவா!'' *(உன் 2:11-13).*

நிரம்பி வழியும் அனுபவம் எவ்வளவு மேன்மையானது! சாதாரணமாக! ஒரு லிட்டர் தேங்காய் எண்ணை வாங்கச் செல்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். கடைக்காரன் நிரம்பி வழிய வழிய ஊற்றினால் எத்தனை சந்தோஷம்! அரைகுறையாக ஊற்றுவதை நாம் விரும்புவதில்லை! ஆவிக்குரிய ஜீவியத்தில் மட்டும் அரைகுறை திருப்தி ஏனோ? தேவ ஜனமே, நிரம்பி வழியும் அனுபவங்களை வாஞ்சிப் பாயாக!

1. நிரம்பி வழியும் பாத்திரங்கள்:-

''என் பாத்திரம் நிரம்பி வழிகிறது'' என்று ஆனந்தக் கூத்தாடுகிறார் தாவீது ராஜா (சங் 23:5). பாத்திரம் என்பது வேறு ஒன்றுமில்லை. அது நம் உள்ளமே! நமது ஆத்துமாவே! கர்த்தர் அபிஷேக தைலத்தை நம் உள்ளத்தில் ஊற்றுவதற்கு நமது உள்ளத்தை ஆயத்தப்படுத்திக் கொள்வது எவ்வளவு அவசியம். உன் பாத்திரம் சுத்தமாய் இருக்கிறதா? பரிசுத்தமாய் பாதுகாத்துக் கொண்டாயா?

''ஒரு பெரிய வீட்டிலே பொன்னும் வெள்ளியுமான பாத்திரங்களுமல்லாமல், மரமும் மண்ணுமான பாத்திரங்களுமுண்டு; அவைகளில் கனத்திற்கும் சில கனவீனத்திற்குமானவைகள். ஆகையால் ஒருவன் இவைகளை விட்டு, தன்னைச் சுத்திகரித்துக் கொண்டால், அவன் பரிசுத்தமாக்கப்பட்டதும், எஜமானுக்கு உபயோகமானதும், எந்த நற் கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான கனத்துக்குரிய பாத்திர மாயிருப்பான்'' (2தீமோ 2:20,21).

''தன்னை சுத்திகரித்துக் கொண்டால்...'' என்று அப்போஸ்தலனாகிய பவுல் நிபந்தனை விதிக்கிறார். உதாரணமான தூசி நிரம்பிய ஒரு பாத்திரத்தில் போய் பால் வாங்குவீர்களா? துருப்பிடித்துப் போன ''பைப்'' வழியாக வரும் தண்ணீரைக் குடிப்பீர்களா? இல்லை தூய்மையான பாலையும், சுத்தமான தண்ணீரையும் அழுக்கும், துருவும் நிறைந்த பாத்திரங்கள் தீட்டுப்படுத்தி விடுமே. தேவபிள்ளையே, உன் பாத்திரங்களை சுத்தப்படுத்து. யாரோடு நல்மனம் பொருந்த வேண்டுமோ உடனே போய் நல்மனம் பொருந்து; திருப்பிக் கொடுக்க வேண்டிய பொருட்களை மன்னிப்புக்கேட்டு திருப்பிக்கொடு; கண்ணீரோடு உன் பாவங்களுக்காக தேவ சமுகத்தில் அழுது மன்றாடு; இயேசு கிறிஸ்துவின் தூய இரத்தத்தால் உன் உள்ளத்தை கழுவி பரிசுத்தப்படுத்து. நிரம்பி வழியச் செய்யும் கிறிஸ்து உன் பாத்திரத்தை நிரம்பி வழியச் செய்வார்!

''விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத் தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார்'' (யோவா 7:38). ஆமென், அல்லேலூயா!

2. நிரம்பி வழியும் படகுகள்:-

''இரண்டு படவுகளும் அமிழத்தக்கதாக நிரப்பினார்கள்'' (லூக்கா 5:7).

மீன்களால் நிரம்பி வழியும் படவுகள்! பரிசுத்தாவியால் நிரப்பப் பட்ட ஜனங்களால் ஆத்தும ஆதாயம் செய்யாமல் இருக்க முடியாது. பரிசுத்த ஆவியினால் தேவ அன்பு நமக்குள் ஊற்றப்பட்டிருக்கிற படியால் நாம் பெற்ற பரிசுத்த ஆவி ஆத்துமாக்களண்டை நம்மை நெருக்கி ஏவுகிறது. தேவ பிள்ளையே, உன் ஊழியத்தில் ஆத்துமாக்கள் நிரம்பி வழிய வேண்டுமானால் பரிசுத்தாவியின் அபிஷேகம் நிரம்பி வழியும் அனுபவம் உனக்குத் தேவை.

சிலர் இரட்சிப்பின் அனுபவமே போதும் என்று நின்று விடுகிறார்கள். ஆழமான அனுபவங்களுக்குச் செல்ல விரும்புவ தில்லை. அப்படிப்பட்டவர்கள் மீன் பிடிக்கச் சென்றால் ஆத்துமாக்கள் கிடைப்பதில்லை. உனக்கு உன் ஆலயம் நிரம்ப ஆத்துமாக்கள் வேண்டுமா? ஆழத்துக்கு வா?

கர்த்தர் சொன்னார்: ''ஆழத்திலே தள்ளிக் கொண்டு போய் மீன் பிடிக்கும்படி உங்கள் வலைகளைப் போடுங்கள் என்றார். அதற்கு சீமோன் ஐயரே, இராமுழுவதும் நாங்கள் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை. ஆகிலும் உம்முடைய வார்த்தையின்படியே வலைகளைப் போடுகிறேன்'' என்றான் (லூக்கா 5:4,5).

''ஆழத்திலே'' ''வார்த்தையின்படியே'' என்கிற இரு வார்த்தை களையும் சற்றே சிந்தியுங்கள். மிகுதியான மீன்களைப் பிடிக்கும் இரகசியம் இதற்குள்ளேதான் அடங்கியிருக்கிறது.

3. நிரம்பி வழியும் கூடைகள்:-

துணிக்கைகளினாலே பன்னிரண்டு கூடைகளை நிரப்பினார்கள் *(யோவான் 6:13)*.

நிரம்பி வழியச் செய்வதில் நம் அருமை இயேசு கிறிஸ்துவுக்கு இணை யாரும் கிடையாது.

எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவர் அவர்! *(எபேசியர் 1:23)*. அல்லேலூயா!

மூன்று நாட்கள் வனாந்தரத்தில் தொய்ந்து போன ஆத்துமாக் களுக்கு வேண்டிய மட்டும் வாற்கோதுமை அப்பங்களைக் கொடுத்தார் வாற்கோதுமை என்பது கர்த்தருடைய வசனத்திற்கு அடையாள மல்லவா? வனாந்திரத்தில் வேண்டிய மட்டும் பரலோக மன்னாவினால் போஷித்த தேவன் இன்றைக்கும் தமது வசனத்தினால், கர்த்தரைப் பற்றிய அறிவினால் நம்மை நிரப்புகிறார். நம்மை நிரப்பிவிட்டது

மட்டுமல்ல, நமக்கு வேண்டியபோதெல்லாம் ஓடிச்சென்று மீண்டும் மீண்டும் சாப்பிடும்படி பன்னிரண்டு கூடைகளில் நிரப்பியும் வைத்திருக்கிறார்.

பன்னிரண்டு கூடைகளும் பன்னிரண்டு அப்போஸ்தலர்களைக் குறிக்கிறது. அன்று இயேசு தம்மோடு பன்னிரண்டு சீஷர்களை வைத்திருந்தது போல இன்றும் அப்போஸ்தல உபதேசங்களால் நிரம்பி வழியும் பன்னிரண்டு கூடைகள் நமக்கு உண்டு! அல்லேலூயா!

நம்மை நிரப்புகிறவர் இயேசு. உன் பாத்திரங்கள் நிரப்பப்படட்டும், உன் கூடைகள் நிரப்பப்படட்டும், உன் படவுகள் நிரப்பப்படட்டும் உன்னை நிரப்புகிற இயேசு உன் அருகிலேயே நிற்கிறார்! நிரப்பப்படுவாயாக!

அத்தியாயம்
6

கன்மலையின் வெடிப்பும், புறாவும்!

''கன்மலையின் வெடிப்புகளிலும் சிகரங்களின் மறைவிடங்களிலும் தங்குகிற என் புறாவே, உன் முகரூபத்தை எனக்குக் காண்பி, உன் சத்தத்தை நான் கேட்கட்டும்'' (உன் 2:14).

உன்னதப்பாட்டு வேதப் புஸ்தகத்தின் மகா பரிசுத்தஸ்தலம் போன்றது. உள்ளத்தில் விருத்தசேதனத்தோடு கால்களிலுள்ள மாம்சீக எண்ணங்களாகிய பாதரட்சையைக் கழற்றிப் போட்டுவிடு, ஜெபத்தோடும், பயபக்தியோடும் வாசித்து தியானிக்க வேண்டிய ஒரு உன்னதமான புத்தகம்.

இங்கே நம் ஆண்டவரை ஆத்தும நேசராக, ஆத்தும மணாளனாகக் கண்டு, அவரது மார்பில் நாம் சார்ந்துகொள்கிறோம். உச்சிதமான நேசத்தால் நமமை நேசிக்கும் அவர் உன்னதத்திற்குரிய ஆசீர்வாதங்களால் நம்மை ஆசீர்வதித்து, உன்னதங்களிலே அவரோடுகூட உட்காரும்படி செய்து உன்னதப்பாட்டை, உன்னத ஜெபமாக நம் உள்ளங்களிலே தந்துவிடுகிறார்.

''அவர் என்னுடையவர் நான் அவருடையவள்'' என்னும் உன்னதமான பிரதிஷ்டை, உறுதிப்பாடு நம்மில் இருந்தால் மட்டுமே நமது ஜெபம், அவரிடம் மனம் விட்டு பேசுவதாயிருக்கும். நமது மன்றாட்டு நமக்கும் கர்த்தருக்கும் மன மகிழ்ச்சியாயிருக்கும். ஜெபத்தில் சோர்வு ஏற்படாமல், ஊக்கம் ஏற்படும். ஆகவே, ஜெபத்தோடு கூட சற்றே தியானிப்போமாக!

இங்கே கர்த்தர் தம் ஜெபவீரர்களை, கன்மலையின் வெடிப்புகளிலும், சிகரங்களின் மறைவிடங்களிலும் தங்குகிற 'என் புறாவே' என்று நேசத்தோடு அழைக்கிறார்.

1. என் புறாவே:-

உள்ளத்தைத் துள்ளச் செய்யும் அன்பு இந்த வார்த்தைகளில் இழையோடுகிறதைக் காண்கிறோம் 'என் புறாவே' என்று கர்த்தர் நம் ஒவ்வொருவரையும், எவ்வளவு உரிமையோடு அழைக்கிறார் என்று

சிந்தித்தீர்களா? அவர் தமது சொந்த இரத்தத்தைச் சிந்தி, நம்மை மீட்டுக் கொண்ட உரிமை, தன் ஜீவனிலும் நம்மை அதிகமாய் நேசித்த நேசம் 'என் புறாவே' என்று நம்மை அழைக்க வைக்கிறது.

புறா கபடற்றது. சுத்தமானது, பிச்சு இல்லாதது. மட்டுமல்ல, அது கூவிக்கொண்டே இருக்கும். கூவிக் கொண்டே இருக்கும் அதன் சத்தம், மற்ற எல்லாப் பறவைகளினின்றும் அதை வேறுபடுத்தி அதை எல்லோராலும் போற்றப்படும் ஸ்தானத்திற்கு கொண்டு வருகிறது. தேவபிள்ளையே, உன்னை கர்த்தர் 'என் புறாவே' என்று அழைக்க வேண்டுமானால் உன்னில் 'ஜெப சத்தம்' எழும்பிக் கொண்டே இருக்க வேண்டும். உன் மன்றாட்டு கர்த்தருக்கு முன் கேட்டுக்கொண்டே இருக்கட்டும். உன் ஸ்தோத்திரங்கள் உன் ஆத்மநேசரை மகிழ்வித்துக் கொண்டே இருக்கட்டும். அப்பொழுது அவர் உன்னை 'என் புறாவே' என்று அழைத்து உன்னில் மகிழுவார்.

புறாக்களின் கண்கள், கண்ணீர் ததும்பும் கண்கள். எப்பொழுதும் கண்ணீர் நிறைந்திருக்கும் இந்தப் புறாக்களின் கண்கள் தேசத்திற்காக அழுது அழுது மன்றாடும் ஜெபவீரரைக் குறித்துக்கொண்டே இருக்கிறது. நம் ஆண்டவரின் கண்கள் எத்தகையது? எருசலேமைக் கண்டபோது மனதுருக்கமுள்ள நமது நேசரின் கண்கள் கண்ணீர் குளமாயிற்று. அவர் சமீபமாய் வந்தபோது நகரத்தைப் பார்த்து: அதற்காக கண்ணீர் விட்டழுது. ''உனக்குக் கிடைத்திருக்கிற இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தா யானால் நலமாயிருக்கும் என்றார்'' (லூக்கா 19: 41,42). அவர் மாம் சத்திலிருந்த நாட்களில் பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி வேண்டுதல் செய்தார் என்று எபிரெயர் 5:7-ல் வாசிக்கிறோம்.

தேவபிள்ளையே, உன் முகரூபத்தைக் கர்த்தருக்குக் காண்பி. உன் கண்கள் ஜெப பாரத்தோடு கண்ணீர் சிந்தும் மன்றாட்டு கண்கள்தானா? கர்த்தர் உன்னை 'புறாவே' என்று அழைக்க முடியுமா?

2. கன்மலையின் வெடிப்புகளில் தங்குகிற புறா:-

கிறிஸ்துவின் காயங்களில் மறைந்துகொண்டு அவரது இரத்தத்தை அடைக்கலமாக்கி மறைந்து அந்தரங்கத்தில் இருதயத்தைக் கிழித்து ஜெபிக்கும் ஜெபம் எவ்வளவு வல்லமையுள்ளது! கிறிஸ்துவின் காயங்களை தியானித்து விட்டு, நீ ஜெபிக்க ஆரம்பித்தால் உடைந்த உள்ளத்தோடு உன்னால் ஜெபிக்கமுடியும். இது ஒரு ஆழமான

இரகசியம். அநேகருக்கு ஜெபிக்க முடிவதில்லை. காரணம் அவர்கள் கன்மலையின் வெடிப்புகளில் தங்குவதில்லை.

அன்று மோசே கர்த்தரிடம், ''உம்முடைய மகிமையை எனக்குக் காண்பித்தருளும்'' என்று ஜெபித்தார் (யாத் 33:18). அதற்கு கர்த்தர், ''இதோ என்னண்டையில் ஒரு இடம் உண்டு; நீ அங்கே கன்மலையில் நில்லு. என் மகிமை கடந்து போகும்போது, நான் உன்னை அந்தக் கன்மலையின் வெடிப்பிலே வைத்து, நான் கடந்து போகுமட்டும் என் கரத்தினால் உன்னை மூடுவேன்'' என்றார் (யாத். 33:21,22).

ஆம், கன்மலையின் வெடிப்புகள்-தேவமகிமையைத் தரிசிக்கும் இடம். கன்மலையின் வெடிப்புகள்-மறைந்து ஜீவிக்கும் இடம். ஜெபத்திற்கு பாதுகாவலான இனிமையான இடம் நம் ஆத்துமநேசர் நமக்காகத் திறந்து தந்த திறப்பின் வாசலான இடம் கன்மலையின் வெடிப்புகளை சற்றே தியானிப்போமா?

a. **சிதையுண்ட வெடிப்புகள்:** அடிப்பட்டால் காயமேற்படும். காயம் பட்ட இடத்திலே மீண்டும் மீண்டும் அடித்தால் அந்த இடம் சிதைந்து போகும். கொடிய வேதனை உயிரைப் பிழியும் இயேசுவின் சரீரம் சிதையுண்டு அந்தக் கேடு அடைந்தபடியினால், அநேகர் அவரைக் கண்டு பிரமிப்படைந்தார்கள் (மத் 27:30; ஏசாயா 52: 14).

ஆ! நாம் அந்த சிதையுண்ட வெடிப்புகளுக்கு பறந்து செல்வோம். அநேக குடும்பங்கள் சிதையுண்டு. நொறுங்கி போயிருக்கின்றன. பில்லி சூனியங்களாலும், நோய்களாலும், சோதனையின் மேல் சோதனையாலும் பாடுபடும் மக்களுக்காக ஜெபிக்க இதைவிட வேறு நல்ல இடம் எது? நமக்காக சிதையுண்ட கர்த்தர் நிச்சயமாக நம் காயங்களைக் கட்டுவார். நம்மை ஆறுதல்படுத்துவார்.

b. **கிழிக்கப்பட்ட வெடிப்புகள்:** இயேசுவையோ வாரினால் அடித்தார்கள் அவர் சரீரம் கிழிக்கப்பட்டது (மத் 27:26, யோவான் 19:1). அவர் சரீரத்திலுள்ள உழப்பட்ட வெடிப்புகள் நம்மோடு உடன்படிக்கை செய்து, நம்முடைய வியாதிகளையெல்லாம் குணமாக்குகிற தன்றோ? அவருடைய தழும்புகளால் நாம் குணமாகிறோம். தேவபிள்ளையே, தீராத வியாதியா? கொடிய நோய்களா? அவரது தழும்புகளாகிய வெடிப்புகளுக்கு உடனே பறந்துசெல். உன் முக ரூபத்தை அவருக்குக் காண்பி, உன் சத்தத்தை அவர் கேட்கட்டும்.

c. **ஊடுருவிப் பாய்ந்த வெடிப்புகள்:** என் கைகளையும், கால்களையும் உருவக்குத்தினார்கள் (சங் 22:16). தாவீது சொல்லுகிறார்:

நான் சிறுமையும் எளிமையுமானவன் என் இருதயம் எனக்குள் குத்துண்டிருக்கிறது (சங் 109:22) தேவபிள்ளையே, உன் உள்ளமும் அவ்வாறே வேதனையுறுகிறதா? வார்த்தைகளால், நீ நேசித்தவர்களே உன்னை உருவக்குத்துகிறார்களா? உன் முறிந்த ஆவி காயங்கட்டப் படும்படி, நொந்துபோன இருதயம் குணமாகும்படி கன்மலையின் வெடிப்புகளையே நோக்கிப்பறந்து செல். உன் மன்றாட்டின் சத்தத்தை அவர் கேட்கட்டும்.

d. பிளக்கப்பட்ட வெடிப்புகள்: கிறிஸ்துவின் விலா ஈட்டியால் பிளக்கப்பட்டது (யோவா 19:34). ஆம், அங்கே நமக்கு ஓர் இடத்தை உண்டாக்கிக் கொடுத்தார். ஆதாமின் விலாவிலே ஏவாள் மணவாட்டி ஸ்தானத்தை அடைந்ததைப் போல பிளக்கப்பட்ட கிறிஸ்துவின் காயங் களுக்குள் நாமும் அவருக்குரியவர்களாகிறோம். அவரது மார்பில் தங்கும் போது இருதயத் துடிப்பாகிய ஜெபம் நமக்கு கேட்கிறது. நம்மையும் ஆழ்ந்த ஜெபத்திற்குள் வழி நடத்துகிறது கன்மலையின் வெடிப்புகளிலே தங்குகிற என் புறாவே என்று கர்த்தர் உன்னை அழைக்கிறார்.

3. சிகரங்களின் மறைவிடங்களில் தங்குகிற புறா:-

கன்மலையின் வெடிப்பு என்று மாத்திரம் சொல்லாமல் ஜெபவீரர் களுக்கென்று கர்த்தர் இன்னுமொரு உன்னதமான இடத்தையும் ஒதுக்கி வைக்கிறார். அதுதான் சிகரங்களின் மறைவு.

கிறிஸ்தவ வாழ்க்கை ஒரு மாபெரும் மலையைப் போன்றது. மலைக்கு அடிவாரம் உண்டு. அதே நேரத்தில் சிகரமும் உண்டு. அடிவாரத்தில் மிருக ஜீவன்கள், மரங்கள், பறவைகள், பூக்கள், சலசலப்புகள், புயல் காற்றுகள் எல்லாம் உண்டு. ஆனால் சிகரமோ எப்போதும் மேகங்களோடு உறவாடிக் கொண்டேயிருக்கும். சூரியனின் மகிமையான ஒளி அங்கு மென்மையாக வீசிக்கொண்டே இருக்கும். அப்படியே குடும்ப ஜீவியத்தில் வெளியரங்கமான பிரச்சனைகள் போராட்டங்கள் இருக்கலாம். ஆனால் உன் உள்ளத்தின் ஆழமானது கிறிஸ்துவோடு எப்போதும் இடைவிடாமல் உறவாடிக் கொண்டே இருக்க வேண்டும். இடைவிடாத ஜெபத்தொனி, இடைவிடாத ஸ்தோத்திரங்கள் உன்னைச் சிகரங்களின் மறைவிடத்திற்குக் கொண்டுச் செல்லும். அங்கு தேவனோடு தனிப்பட்ட முறையிலே பேசி, அளவளாவிக் களிக்க முடியும்.

தாவீது சொல்லுகிறார்: ''என் இருதயம் தொய்யும் போது பூமியின் கடையாந்தரத்திலிருந்து உம்மை நோக்கிக் கூப்பிடுவேன்; எனக்கு

எட்டாத உயரமான கன்மலையில் என்னைக் கொண்டு போய் விடும்'' *(சங் 61:2).*

சிகரங்களின் மறைவிடத்துக்கு எந்த தீய பிராணியும் ஏறிவர முடியாது. பூமியின் சலசலப்புகள் அங்கு இருப்பதில்லை. அமைதி தெய்வீக அமைதி, தெய்வீக பிரசன்னம் அங்கு நிலவும்.

அநேகருக்குக் கிறிஸ்துவோடு மறைவிடங்களில் தங்கியிருக்க விருப்பமில்லை. கிறிஸ்து தன் ஊழியத்தை ஆரம்பிக்கும் முன் சிகரங்களின் மறைவிடமாக வனாந்திரத்தில் நாற்பது நாள் தங்கியிருந்து தேவனோடு உறவாடிக் கொண்டிருந்தார். ''என் நேச குமாரன்'' என்று சாட்சி பெற்றார். 'என் புறாவே' என்று அவர் உன்னைக் குறித்து சாட்சி கொடுக்க உபவாச ஜெபத்திற்காக நேரத்தை ஒதுக்கி, சிகரங்களின் மறைவுக்குக் கடந்து செல்வாயாக.

எலியா தன் சிகரங்களின் மறைவிடமாக கேரீத் ஆற்றங்கரையைத் தெரிந்துகொண்டு, அங்கே ஒளிந்திருந்தான். அங்கே தான் ஜெபத்தில் கற்றுக்கொண்ட ஆத்மீக பெலன் வானத்தை திறக்கவும் அடைக்கவும் அவனுக்கு அனுகூலம் செய்தது.

தேவபிள்ளையே, இன்று கிறிஸ்தவம், விளம்பரமாக விலை யாகிக் கொண்டிருக்கிறது. வியாபாரமாகி விட்டது. ஆனால் தேவன் தன்னுடையவர்களை அறிவார். சிகரங்களின் மறைவிடங்களிலே, அந்தரங்க ஜெபங்களிலே தங்கள் இருதயங்களை ஊற்றுகிறவர்களை, நகரத்தின் சகல அருவருப்புகளினிமித்தம் கிறிஸ்துவின் பாதத்தில் பெருமூச்சோடும் கண்ணீரோடும் மன்றாடுகிறவர்களை, அந்தரங் கத்தைக் காண்கிற தேவன் நிச்சயமாய்க் கண்டு, ''என் புறாவே'' என்று இனிமையாய் அழைப்பார்! உன் முகரூபத்தை அவருக்குக் காண்பி. உன் சத்தத்தை அவர் கேட்கட்டும்.

அத்தியாயம்
7

முக ரூபத்தைக் காண்பி!

''கன்மலையின் வெடிப்புகளிலும் சிகரங்களின் மறைவிடங்களிலும் தங்குகிற என் புறாவே! உன் முக ரூபத்தை எனக்குக் காண்பி, உன் சத்தத்தை நான் கேட்கட்டும்'' (உன் 2:14).

உலகத்தில் கோடான கோடி மக்கள் இருந்தாலும் ஒருவருக்கு இருக்கும் முகம் மற்றவர்களுக்கு இருப்பதில்லை. எப்படி இரண்டு கை ரேகைகள் ஒன்றாயிருப்பதில்லையோ அப்படியே முகரூபங்களும் ஒன்றாயிருப்பதில்லை. ஏதாவது ஒரு சிறிய மாற்றம், வித்தியாசம் காணப்படுகிறது.

முக ரூபத்தைக் கண்டவுடன் நாம் ஆட்களை அடையாளம் கண்டு கொள்கிறோம். நமக்குப் பிரியமானவர்களின் முகம் எப்பொழுதும் நம் கண்களுக்கு முன்நின்று கொண்டே இருக்கிறது. முகச்சாயலை வைத்துக் கொண்டு அவன் எந்த தேசத்தான், என்ன இனத்தைச் சேர்ந்தவன் என்று சிலர் உடனே சொல்லி விடுவதுண்டு.

அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பது பழமொழி. சிலர் முகத்தைப் பார்த்தவுடனேயே அவன் உள்ளம் எப்படிப்பட்டதாக இருக்கும் என்று நிர்ணயித்து விடுவார்கள். போலீசார் ஒருவனை அவன் முகத்தோற்றத்திலிருந்தே அவன் ஒரு திருடன் என்று முடிவு செய்து விடுகிறார்கள். சிலருக்கு கோப முகம், சிலருக்கு எரிச்சலின் முகம், சிலருக்கு கேலி பரியாசத்தின் முகம், சிலருக்கு அன்பின் முகம், சிலருக்கு முறுமுறுப்பின் முகம் என்று பலவகையான முகங்கள் நம் கண்களுக்குத் தோன்றுகின்றன.

அந்தரங்கத்தைக் காண்கிற தேவன், இந்த நாளில் உன் முகத்தை எதிர்ப்பார்ப்போடு பார்த்து, உன் முகரூபத்தைக் காண்பி என்று கேட்கிறார். உன் முக ரூபம் எப்படிப்பட்டது.

1. பாவத்தின் முகம்:-

அன்று ஆதாம் தன் முகத்தைக் கர்த்தருக்கு காண்பிக்க வெட்கப்பட்டான். விருட்சங்களுக்குள்ளே ஓடிப்போய் ஒளிந்து

கொண்டான். பாவம், அவன் முகத்தை வெட்கப்படுத்தியது. பாவங்களே, உனக்கும் உன் தேவனுக்குமிடையில் பிரிவினை உண்டாக்குகிறது அநேகர் ஜெபக்கூட்டங்களுக்கு வருவதில்லை. தங்கள் முகங்களை சாக்குப் போக்குகளாகிய விருட்சங்களுக்குள் மறைத்துக் கொள்கிறார்கள். அநேகர் வெளிச்சமாகிய கிறிஸ்துவண்டை வர விரும்புகிறதில்லை காரணம் என்ன தெரியுமா? கிறிஸ்துவண்டை வந்துவிட்டால் பின்பு உலகச் சிற்றின்பங்களை அனுபவிக்க முடியாது என்கிற எண்ணம் தான் கிறிஸ்து சொன்னார்: ''பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான், தன் கிரியைகள் கண்டிக்கப் படாதபடிக்கு, ஒளியினிடத்தில் வராதிருக்கிறான்'' (யோவான் 3:20). தேவபிள்ளையே, தேவ சமுகத்தில் ஜெபிக்க முடியாமல் உன்னை தடுக்கிற பாரம் எதுவாயிருந்தாலும் அதை தீர்மானத்தோடு அகற்றிபோடு. உன்னோடு கூட பகலின் குளிர்ச்சியான வேளையில் உலாவ விரும்பும் கர்த்தர் ''உன் முகரூபத்தை எனக்குக் காண்பி'' என்று ஆவலோடு கேட்கிறார்.

௨. எரிச்சலின் முகம்:-

இது சவுலின் முகம். சவுலுக்கு எப்பொழுதும் தாவீதின் மேல் எரிச்சல், பொறாமை. தாவீது கோலியாத்தைக் கொன்றதினால் ஸ்திரீகள் தாவீதைப் புகழ்ந்து பாடினார்கள். அதனால் ''அந்நாள் முதற்கொண்டு சவுல் தாவீதைக் காய்மகாரமாய்ப் பார்த்தான்'' (1 சாமு. 18:9).

உன் முகரூபம் எப்படி இருக்கிறது? ஜெபிக்கும் மக்களுக் குள்ளேயே போட்டியும் பொறாமையும் ஊட்டிவிட சாத்தான் சதி செய்கிறான். ஒருமனப்பாட்டை குலைக்கிறான். நான் பெரியவன் நீ பெரியவன் என்று பெருமையின் சிந்தையை ஊட்டுகிறான். கடைசியில் தேசத்தில் எழுப்புதல் தாமதமாகிறது.

தேவபிள்ளையே, உன் முகம் எரிச்சலின் முகமாயில்லாதபடி கண்ணீரோடு உன்னைக் காத்துக்கொள். சவுலின் முகம் எரிச்சலோ டிருந்தது. மறு நாளிலே பொல்லாத ஆவி சவுலின் மேல் இறங்கிற்று (1 சாமு 18:10). எச்சரிக்கையாயிரு. ஜாக்கிரதையாயிரு ''தேவன் யோனாவை நோக்கி: நீ ஆமணக்கினிமித்தம் எரிச்சலாயிருக்கிறது நல்லதோ என்றார்; அதற்கு அவன்: நான் மரணபரியந்தமும் எரிச்சலா யிருக்கிறது நல்லதுதான் என்றான்'' (யோனா 4:9). எவ்வளவு துணி கரமான வார்த்தை எவ்வளவு துணிகரமான பதிலடி. வேதனையான வார்த்தை! நினிவேயின் மீட்புக்காக மன்றாட வேண்டிய யோனாக்கள், இன்று சுயநலத்திற்காக எரிச்சலடைந்திருக்கிறார்கள். ஆனால் தேவனு

டைய பிள்ளையே, உன் முகரூபத்தைக் காண்பி என்று கர்த்தர் உன்னிடம் கேட்கிறார். கர்த்தர் உன்னில் சாந்தமுகத்தைக் கண்டு மகிழ்வாரா? அல்லது எரிச்சலின் முகத்தைக் கண்டு வேதனைப் படுவாரா?

3. தண்டனையின் முகம்:-

ஆம், இது சிம்சோனின் முகம். மொட்டையடிக்கப்பட்டு, கண் பிடுங்கப்பட்ட பரிதாபமான முகம். ஆ, இஸ்ரவேலின் நியாயாதிபதியே ஏன் இந்த நிலை உனக்கு வந்தது? தேவபராக்கிரமத்தைக் காண்பிக்க வேண்டிய உன் முகம் ஏன் வேடிக்கைப் பொருளாக மாறியது? சிற்றின்பத்தை விரும்பினாயோ? தேவ வார்த்தைகளை அலட்சியம் செய்தாயோ? ஆ, கர்த்தருக்காக வல்லமையாகப் பிரகாசிக்க வேண்டிய ஊழியர்கள், ஜெப வீரர்கள் இன்று பண பேராசையால், மாமிச இச்சைகளால், உலக சிநேகிதங்களால் கண் பிடுங்கப்பட்டு வல்லமை இழந்து மாவரைத்துக் கொண்டிருப்பதை காண்பது எவ்வளவு வேதனையாக இருக்கிறது.

சிம்சோனே உன் முகரூபத்தை அனைவருக்கும் காண்பி. எல்லாரும் எச்சரிக்கப்படட்டும் சீர்திருந்தட்டும். சிலுவை நாயகனை ஏறிட்டுப் பார்த்து பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு புலம்பி அழு! அவரிடம் இரக்கமுண்டு!

4. பிரகாசிக்கும் முகம்:-

ஆதாமின் முகத்திலிருந்து சிம்சோன் முகம் வரை பார்த்துப் பார்த்து அலுத்துப் போய்விட்ட நாம், நம் நேசரின் முகத்தைப் பார்ப்போமாக! அவர் முகப்பிரகாசம் நம்மையும் பிரகாசிக்கச் செய்யட்டும். ''அவர் முகம் சூரியனைப்போலப் பிரகாசித்தது, அவர் வஸ்திரம் வெளிச்சத்தைப் போல வெண்மையாயிற்று'' (மத் 17:2).

துதித்தல் முகக்களையை உண்டாக்கும். பிரகாசிக்கச் செய்யும். தேவனுடைய பாதத்தில் காத்திருக்கும்போது தேவனுடைய மகிமையின் பிரகாசம் உன்னிலும் வீச ஆரம்பிக்கிறது. மோசே, சீனாய் மலையில் நாற்பது நாட்கள் தேவசமுகத்தில் காத்திருந்தார். முடிவில் மலையிலிருந்து கீழே இறங்கியபோது அவன் முகத்தை ஜனங்கள் தரிசிக்கக் முடியாதபடி அத்தனை பிரகாசமாயிருந்ததால், மோசே முக்காடிட்டுக் கொள்ள வேண்டியதாயிற்று (யாத். 34:33-35). ஸ்தேவானின் முகத்தைத் தியானித்துப் பாருங்கள். அவன் முகம் தேவதூதனுடைய முகம் போலிருக்கக் கண்டார்கள் (அப் 6:15). தேவ சமுகத்தில் நீண்ட நேரம் காத்திருந்து ஜெபித்தால் தேவ மகிமை உன்

முகரூபத்தையும் பிரகாசிக்கச் செய்யும். வெளியரங்கமாக எல்லோராலும் காணக்கூடும் என்பதை ஸ்தேவானின் வாழ்க்கை நமக்குப் போதிக்கிறது. உன் நண்பனை காண்பி, நீ எப்படிப்பட்டவன் என்று சொல்லி விடுவேன் என்கிறான் தத்துவ ஞானி! உன் முகரூபத்தை எனக்குக் காண்பி, ஜெப ஜீவியம் எத்தகையது என்று சொல்லிவிடுவேன் என்கிறார் கர்த்தர்.

5. கெத்செமனேயின் முகம்:-

கெத்செமனேயில் இயேசு முகங்குப்புற விழுந்து ஜெபம் பண்ணினார் என்று வாசிக்கிறோம். கெத்செமனே என்றால் 'எண்ணைச் செக்கு' என்று அர்த்தம். நம் ஆண்டவராகிய கர்த்தர் ஜெபத்தில் தன்னையே பிழிந்த இடம் இது. நமக்காக ஆத்தும வியாகுலத்தோடு இரத்தத்தையும், வியர்வையையும் ஊற்றிக் கொடுத்த இடம் இது! இந்த ஜெப வீரனாகிய கிறிஸ்துவின் முகம் எதிர்ப்பார்ப்போடு உன் முகத்தை ஏறிட்டுப் பார்க்கிறது. ''ஒரு மணி நேரமாவது என்னோடுகூட விழித்திருந்து ஜெபிக்கக் கூடாதா?'' என்று வாஞ்சையோடு கேட்கிறார் (மத். 26:40). உன் முகரூபத்தை அவருக்குக் காண்பி.

6. மகிழ்ச்சியோடு பாடு சகிக்கும் முகம்:-

லூக்கா 9:51ஐ வாசிக்கும்பொழுது கர்த்தர் எருசலேமுக்குப் போக தன் முகத்தை திருப்பினார் என்று அறிகிறோம். எருசலேமில் தான் பாடுபட்டு சிலுவையில் அறையப்பட வேண்டும் என்று கிறிஸ்துவுக்குத் தெரிந்திருந்தும்கூட, மகிழ்ச்சியோடு பாடுகளை எதிர்நோக்கி நடந்தார்.

அங்கே அவரது முகத்தை மூடினார்கள் (மாற்கு 14:65).
முகத்தில் அறைந்தார்கள் (லூக் 22:63-65).
முகத்தில் துப்பினார்கள் (மத் 26:67).

அவரது முகம் அழகுமில்லாமல் சௌந்தரியமுமில்லாமல் அந்தக் கேடடைந்திருந்தது. பாடுபட மகிழ்ச்சியோடும், பொறுமையோடும் உறுதியோடும், தன் முகத்தை ஒப்புக்கொடுத்தார். சிறு சிறு பாடுகளிலே சோர்ந்து போய் விடும் தேவபிள்ளையே, உன் முகரூபத்தை அவரிடம் காண்பி!

கிறிஸ்துவின் முகம் ஆவலோடு உன்னை எதிர்பார்க்கிறது! அவர் முகம் உன்னைப் பிரகாசிக்கச் செய்யும்! அவர் முகம் உன்னை ஜெப வீரனாக்கும். அவர் முகம் பாடுகளைச் சகிக்க உனக்கு பெலன் தரும். ஆமென்; அல்லேலூயா!

அத்தியாயம்

8

யாரிடத்தில் போவோம் ஆண்டவரே!

''இயேசு பன்னிருவரையும் நோக்கி: நீங்களும் போய் விட மனதாயிருக்கிறீர்களோ என்றார். சீமோன் பேதுரு அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே'' என்றான் (யோவான் 6:67-68).

மனிதனின் நிலை என்ன? மனிதன் எங்கே போகிறான்? சிந்தித்துப் பார். குழந்தையாயிருக்கும்போது தன் தேவைகளுக்கெல்லாம் தாயிடம் போகிறான். படிக்கும்போது அறிவுக்காகக் கல்வி கூடங்களுக்குச் செல்கிறான். ஆனால் அவனுக்குள் விலையேறப்பெற்ற ஆத்துமா இருக்கிறதே! ஆத்துமாவின் தேவைகளுக்கு அவன் யாரிடம் போவான்? மரணத்திற்கு பின் அவன் யாரிடத்தில் போவான்?

தூய அகஸ்டின் சொன்னார், ''நிலையற்ற இவ்வுலகில் அலைந்து கொண்டிருந்த என் ஆத்துமா கிறிஸ்துவைக் காணும்வரை தத்தளித்துக் கொண்டிருந்தது; கண்டபோதோ இளைப்பாறியது.'' *My soul was restless till it rested in Jesus.*

''யாரிடத்தில் போவோம் ஆண்டவரே!'' என்று துயரத்தோடு அன்று பேதுரு கேட்டான். சகோதரனே, சகோதரியே, நீ யாரிடத்தில் போவாய்? யாரிடம் தஞ்சம் தேடுவாய்? யாரிடம் அடைக்கலம் புக ஓடுவாய்?

யாரிடம் போவாய்? அரசாங்கத்திடமா? கர்த்தர் வானத்தை அடைத்தால் அரசாங்கம்தான் என்ன செய்யும்? சரித்திரத்தை கவனித்துப் பார். சாம்ராஜ்யங்கள் சரிகின்றன, நாடுகள் சிதைகின்றன, யுத்தங்கள் தேசங்களை பாழ்ப்படுத்துகின்றன.

யாரிடம் போவாய்? படிப்பாளிகளிடமா? செல்வந்தர்களிடமா? நண்பர்களிடமா? வேதம் சொல்லுகிறது: ''பிரபுக்களையும், இரட்சிக்கத் திராணியில்லாத மனுபுத்திரனையும் நம்பாதேயுங்கள். அவனுடைய ஆவி பிரியும், அவன் தன் மண்ணுக்குத் திரும்புவான், அந்நாளிலே அவன் யோசனைகள் அழிந்துபோம். யாக்கோபின்

தேவனைத் தன் துணையாகக் கொண்டிருந்து, தன் தேவனாகிய கர்த்தர் மேல் நம்பிக்கையை வைக்கிறவன் பாக்கியவான்!'' (சங் 146:3,4,5).

யாரிடம் போவாய்? ஒரு பக்கம் உன்னதமான இயேசு உன்னை அன்போடு எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கிறார். மறு பக்கம் உலகமும் அதன் ஆசை இச்சைகளும் கவர்ச்சியான வலையை விரித்து உன்னை இழுக்க வகைத் தேடுகிறது.

தீர்மானம் செய்ய வேண்டியது உன் பொறுப்பு. அன்று எலியா தீர்க்கதரிசி கேட்டார், *''நீங்கள் எந்த மட்டும் இரண்டு நினைவுகளால் குந்திக் குந்தி நடப்பீர்கள்; கர்த்தர் தெய்வமானால் அவரைப் பின்பற்றுங்கள்; பாகால் தெய்வமானால் அவனைப் பின்பற்றுங்கள் என்றான்'' (1 இராஜா 18:21).*

இன்றைக்கு நீ ஓர் தீர்மானம் செய்து, யாரிடம் போவாய்? யாரைப் பின்பற்றுவாய்? யாரைச் சேவிப்பாய்? என்பதை திட்டமாய் முடிவு செய்வாயானால் இரண்டு நினைவுகளினால் அலைமோத வேண்டியதில்லை.

ஒரு முறை ஒரு வாலிபனை நான் சந்தித்தேன். அவன் குடும்பத்துக்கும் அவன் சித்தப்பா குடும்பத்தாருக்கும் நெடுநாளாக சொத்து விஷயங் களில் தகராறு நடந்து கொண்டே வந்தது. கடைசியில் சித்தப்பா, ஒரு மந்திரவாதியை அணுகி, இந்தக் குடும்பத்தினருக்கு விரோதமாய் பயங்கரமான செய்வினை செய்துவிட்டார் அவ்வளவுதான். ஒரு வெள்ளிக்கிழமை இந்த குடும்பத்திலுள்ள தகப்பனாருக்குத் திடீரென்று கொடூரமான வயிற்றுவலி ஏற்பட்டது. வயிற்றின் அடிப்பாகத்தைக் கொடூரமான ஒரு கரம் பிழிவதைப் போல இருந்தது. என்னென்னவோ வைத்தியம் செய்தும். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டும் முடியாமல் மூன்றாம் நாள் மரித்துப் போனார்.

கண்ணீரோடும், துக்கத்தோடும் தங்கள் அன்புத் தகப்பனை அடக்கம் செய்துவிட்டு வந்தார்கள். ஒரு மாதம் கூட ஆகவில்லை. அதே வயிற்றுவலி மூத்தமகனுக்கு வந்தது. அவன் துடித்தான், அலறினான். அவனை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லும் வழியில்தானே மரணமடைந்தான். பயங்கர கோரப்புயல் அந்த வீட்டை சிதைப்பதைப் போல இருந்தது. அடுத்த மாதம் அடுத்த பெண், அதற்கடுத்த மாதம் தாய், நான்கு மரணங்கள் ஒரு சில மாதங்களில் ஒரே குடும்பத்தில் ஏற்பட்டிருக்குமானால் அந்தக் குடும்பத்தின் நிலை எதுவாக இருந்திருக்கும். யோசித்துப் பாருங்கள். வானத்தின் கீழே வெறுமையாய், அடைக்கலமின்றி தவித்தார்கள்.

கடைசியில் அந்தக் குடும்பத்தில் மிஞ்சியவன் ஒரே ஒரு வாலிபன் மட்டும்தான். அவன் தன் வீட்டிற்குள் செல்லவே பயந்து, யாரிடம் போவேன்? யாரிடம் போவேன்? என்று அழுதவனாய் ஒரு மைதானத்திற்குப் போய், எந்த தெய்வம் உண்மையான தெய்வம்? யார் எனக்கு அடைக்கலம் தருவார்? நான் யாரிடம் போவேன்? என்று புலம்பினான். தனக்குத் தெரிந்த ஒவ்வொரு தெய்வங்களின் பெயரால் சொல்லிக் கூப்பிட்டுப் பார்த்தான். ஒரு பிரயோஜனமும் இல்லை. அடுத்த வெள்ளிக்கிழமை அவனுக்கு அதே வயிற்று வலி வந்தது. பல மணி நேர மரண போராட்டத்திற்குப் பின் அவன் உயிர் அவன் சரீரத்தை விட்டு வெளியே வந்தது. கீழே கிடந்த உயிரற்ற தன் சரீரத்தை அவன் கண்டான். மறுபடியும் அந்த சரீரத்திற்குள் அவன் ஆவி பிரவேசிக்க எவ்வளவோ முயன்றும் முடியவில்லை! இனி அவன் யாரிடம் போவான்?

சில நிமிட தத்தளிப்புக்குப் பின், அவன் ஆவி வானத்திலிருந்து இறங்கிய ஓர் நூல் இழையோடு ஒட்டிக்கொண்டது. உயர உயர செல்ல ஆரம்பித்தான். பூமி சிறியதாகி சிறியதாகி மறைந்தது. மிக உயரத்தில் ஒரு தேவாலயம் இருப்பதை அவன் உணர்ந்தான். அவன் கிறிஸ்தவனல்ல. ஆயினும் அந்த ஆலயத் தோற்றத்திலிருந்து அது கிறிஸ்துவின் ஆலயம் என்பதை அறிந்து கொண்டான். உள்ளே பிரவேசித்தபோது விரிக்கப்பட்ட வேதப் புத்தகத்தைக் கண்டான். அருகில் சென்று வாசித்த போது அது 103 ஆம் சங்கீதத்தின் ஒரு பகுதியாயிருந்தது. ''அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி, உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு, உன்னைக் கிருபையினாலும் இரக்கங்களினாலும் முடிசூட்டி...'' *(சங். 103:3,4)*.

அப்பொழுதுதான் அவன் அறிந்து கொண்டான். கிறிஸ்தவர்களின் தெய்வமாகிய இயேசு கிறிஸ்துவிடம் போவதைத் தவிர வேறு வழியே இல்லை என்பதை உணர்ந்து, ''இயேசுவே, நான் பூமியில் வாழ எனக்கு இன்னும் ஒரு தருணம் தருவீரானால் நான் உமக்கு சாட்சியாக இருப்பேன்'' என்று கதறினான். அழுது மன்றாடினான். ஆம், அவன் ஜெபம் கேட்கப்பட்டது. ஆவி மறுபடியும் சரீரத்திற்குள் பிரவேசித்தது. உடனே எழுந்து ஓடி கர்த்தருடைய ஆலயத்திற்கு வந்து கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டான். இன்றைக்கு சென்னையில் அரசாங்க வேலையில் பணி புரிகிறான்!

யாரிடம் போவோம் ஆண்டவரே என்று பேதுரு கேட்டான். ஆம், அக்கிரமங்கள் மன்னிக்கப்பட யாரிடம் போவாய்? நோய்கள்

குணமாகிட யாரிடம் போவாய்? உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்க யாரிடம் போவாய்? நீ நன்மையினாலும் கிருபையினாலும் முடிசூட்டப்பட யாரிடம் போவாய்? இயேசு கிறிஸ்து! இயேசு கிறிஸ்து!! இயேசு கிறிஸ்து!!!

''கொடூரமானவர்களின் சீறல் மதிலை மோதியடிக்கிற பெரு வெள்ளத்தைப் போல் இருக்கையில், நீர் ஏழைக்குப் பெலனும், நெருக்கப்படுகிற எளியவனுக்குத் திடனும், பெருவெள்ளத்துக்குத் தப்பும் அடைக்கலமும், வெயிலுக்கு ஒதுங்கும் நிழலுமானீர்'' (*ஏசாயா 25:4*).

1. பிரச்சனைகளில் யாரிடம் போவாய்?

பிரச்சனையில்லாத மனிதன் உலகத்தில் யாரும் இல்லை. ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒரு பிரச்சனை இருந்து கொண்டே இருக்கிறது. நீ யாரிடம் போவாய்?

அன்று அன்னாளுக்கு ஒரு பிரச்சனை இருந்தது. குழந்தை இல்லாத பிரச்சனை. ஆ! அது எத்தனை வேதனையான, ஏக்கமான, அங்கலாய்ப்பான பிரச்சனை! அவள் புருஷனாகிய எல்கானா அவளைப் பார்த்து: அன்னாளே ஏன் அழுகிறாய்? ஏன் சாப்பிடாதிருக்கிறாய்? ஏன் சஞ்சலப்படுகிறாய்? என்று ஆறுதல்படுத்த முயன்றான் (*1 சாமு 1:8*).

முடிவில் அவள், தன் கர்ப்பத்தைத் திறக்க வல்லவரான கர்த்தரின் பாதத்திலே போய் விழுந்து மனங்கசந்து அழுதாள். ஆம், அவரிடத்தில் வருகிறவர்களை அவர் புறம்பே தள்ளார். ஒருபோதும் வெறுமையாய் அனுப்பி விடமாட்டார். ஆம், கர்த்தர் அவளுக்கு ஆசீர்வாதமான சாமுவேலோடுகூட இன்னும் மூன்று குமாரர்களையும் இரண்டு குமாரத்திகளையும் கட்டளையிட்டார். அல்லேலூயா!

கர்த்தரிடம் போ! தேவபிள்ளையே, உன்னைத் தாழ்த்தி கண்ணீரோடு கர்த்தருடைய பாதத்திற்குப் போ! அவர் உனக்காக யாவையும் செய்து முடிக்கிறவர் (*சங் 138:8*). இந்தக் கல்லை எனக்காக யார் புரட்டித் தள்ளுவார்கள் என்ற அங்கலாய்ப்போடு மகதலேனா மரியாள் கல்லறைக்கு வந்தாள். ஆம், அங்கே கல் புரட்டித் தள்ளப்பட்டிருக்கிறதைக் கண்டாள் (*லூக் 24:2*).

ஆம், தேவபிள்ளையே, உன் வாழ்க்கையின் ஆசீர்வாதத்தைத் தடுத்துக் கொண்டிருக்கும் கல்லை, உன் குடும்பத்தின் சமாதானத்தைக் கெடுத்துக் கொண்டிருக்கும் சத்துருவின் தடைக்கற்களை இதோ,

கர்த்தர் உனக்காக புரட்டித் தள்ளுகிறார். யாரிடம் போவோம் என்று அங்கலாய்க்காதபடி கிறிஸ்துவிடம் மட்டுமே போ! சகல பிரச்சனை களினின்றும் கர்த்தர் உன் கரத்தைப் பிடித்து வழி நடத்தி உன்னைத் தப்புவிப்பார்!

2. பயத்தின் நேரங்களில் யாரிடம் போவாய்?

பயம் மனிதனின் பயங்கர சத்துரு. யோபு சொல்கிறார்: ''நான் அஞ்சினது எனக்கு வந்தது'' (யோபு 3:25). பயம் அநேக வியாதிக்கு மூலகாரணமாகிறது. இனம் புரியாத திகில், அச்சம், அநேக உள்ளங்களைப் பிடித்து வாட்டுகிறது! இரவில் கனவுகளில் பலவித பயங்கள் உன் இருதயத்தை வாட்ட, நான் யாரிடம் போவேன் என்று நீ தடுமாறுகிறாயா?

நம் கர்த்தர் ஒருவரே 'பயப்படாதே' என்று மீண்டும் மீண்டும் நம்மைத் தேற்றுகிறார். பயப்படாதே என்னும் வார்த்தை வேதத்தில் 366 முறை வருகிறது. ஒரு நாளுக்கு ஒரு முறை (லீப் வருஷத்திற்கும் சேர்த்து) கர்த்தர் ஏற்கெனவே நமக்காக எழுதி வைத்திருக்கிறார்.

பேதுருவின் வாழ்க்கையில் ஒரு நாள் இரவு ''அவன் காற்று பலமாயிருக்கிறதைக் கண்டு பயந்து அமிழ்ந்துபோகையில் ஆண்ட வரே, என்னை இரட்சியும் என்று கூப்பிட்டான். உடனே இயேசு கையை நீட்டி அவனைப் பிடித்து இரட்சித்தார்'' (மத் 14:30-31).

உன் வாழ்வில் பயங்கர காற்று சுழன்று வீசி உன் குடும்ப வாழ்க்கையையே சிதைத்து விடும்படியாக மோதுகிறதா? நீ யாரிடம் போவாய்? பேதுரு தான் அடைக்கலம் புகவேண்டிய கன்மலையை அறிந்திருந்தார். ''ஆண்டவரே'' என்று கூப்பிட்டபோது உடனே இயேசு அவன் கையைப் பிடித்து தூக்கி விட்டதுமல்லாமல் புயலையும் அமர்த்தித் தந்தார்! இவ்வளவு அன்பும் வல்லமையுமான கிறிஸ்துவை விட்டுவிட்டு, நீ யாரிடம் ஓடுவாய்?

3. வியாதி நேரங்களில் யாரிடம் ஓடுவாய்?

வேதத்தில் ஆசா என்ற ஒரு அரசனைக் குறித்து வாசிக்கிறோம். கர்த்தர் அவனை ஆசீர்வதித்து, அவனுக்கு பகைவர்மேல் ஜெயத்தைக் கட்டளையிட்டு அவனை உயர்த்தினார். ஆனால் அவன் உயர்ந்த போதோ கர்த்தரை விட்டு விட்டான்.

2 நாளாகமம் 16:12 சொல்கிறது, ''ஆசா அரசாண்ட முப்பத் தொன்பதாம் வருஷத்திலே தன் கால்களில் வியாதி கண்டு, அவன்

நோவு மிகவும் உக்கிரமாயிருந்தது; அவன் தன் வியாதியிலும் கர்த்தரை அல்ல, பரிகாரிகளையே தேடினான்.'' பரிகாரம் செய்ய முடியவில்லை. புறக்கணிக்கப்பட்டவனாய் மரித்தான்.

இன்னும் ஒரு உதாரணம் 2 இராஜா 1:2-4 வரை வாசியுங்கள். அகசியா என்னும் ராஜா கிராதியின் வழியாய் விழுந்து வியாதிப்பட்டு: இந்த வியாதி நீங்கிப் பிழைப்பேனோ என்று எக்ரோனின் தேவனாகிய பாகால் சேபூபிடத்தில் போய் விசாரியுங்கள் என்று ஆட்களை அனுப்பினான். கர்த்தருடைய தூதன் திஸ்பியனாகிய எலியாவை நோக்கி: நீ எழுந்து, சமாரியாவுடைய ராஜாவின் ஆட்களுக்கு எதிர்ப் படப்போய் இஸ்ரவேலிலே தேவன் இல்லை என்றா நீங்கள் எக்ரோனின் தேவனாகிய பாகால் செபூபிடத்தில் விசாரிக்கப் போகிறீர்கள்? இதினிமித்தம் நீ ஏறினக் கட்டிலிலிருந்து இறங்காமல் சாகவே சாவாய் என்று கர்த்தர் சொல்கிறார் என்பதை அவர்களோடே சொல் என்றான். எலியா சொன்ன வார்த்தையின் படியே அவன் இறந்து போனான்.

நீ யாரிடம் போவாய்? எந்தச் சூழ்நிலையிலும், தாயத்துகளை நாடி, மந்திரங்களைத் தேடி ஓடாதே! வியாதி நேரங்களில் உன்னையே நீ ஆராய்ந்து, உன் பாவங்களை அறிக்கையிட்டு கர்த்தரிடம் திரும்பு. அவர் உன்னை ஆசீர்வதிப்பார், சுகமாக்குவார்.

4. மரண நேரங்களில் யாரிடம் போவாய்?

பிரபல நாத்திகவாதியும் கிறிஸ்துவை எதிர்த்து பல புத்தகங்கள் எழுதிய இங்கர்சால் தன் சகோதரன் மரணச் செய்திகேட்டு துடித்துப் போனார். ''ஆ, வாழ்க்கை என்பது வறண்டதும், இருண்டதுமான கோரப்பள்ளத்தாக்கு அதன் இருபுறமும் பயங்கர மலைச்சிகரங்கள்தான் நின்று கொண்டி ருக்கின்றன. ஆபத்து நேரங்களில், மரண நேரங்களில் நாம் அபயக்குரலில் கதறினால், நம் குரலின் எதிரொலிதான் கேட்கிறதே தவிர, ஒத்தாசை வருவதில்லை'' என்று சொல்லி தேம்பித் தேம்பி அழுதார் அந்த நாத்திகவாதி! எவ்வளவு பரிதாபம்.

அதே நேரத்தில் D.L. மூடி இரட்சிக்கப்பட்ட தன் சகோதரனின் மரணத்தில், ''நண்பர்களே, தேவன் எனக்கு ஒரு சகோதரனைத் தந்தபடியால் நான் தேவனைத் துதிக்கிறேன். மட்டுமல்ல, அவனை கிறிஸ்துவண்டை வழி நடத்த தேவன் எனக்குத் தந்த கிருபைக்காக தேவனைத் துதிக்கிறேன் என் சகோதரனை நித்தியத்தில் கண்டு மகிழ்வேன் என்ற நம்பிக்கைக்காக கர்த்தரைத் துதிக்கிறேன்'' என்றார்.

ஒரு நிமிடம் அமைதியாக நின்று விட்டு மரணமே உன் கூர் எங்கே? பாதாளமே உன் ஜெயமெங்கே? என்று முழங்கினார். ஆம். பரிசுத்த வான்கள் தாங்கள் யாரிடம் போகிறார்கள் என்று அறிந்திருக்கிறார்கள்.

நீ அறிந்திருக்கிறாயா? யாரிடம் போவாய்? தாவீது சொல்கிறார், ''பரலோகத்தில் உம்மையல்லாமல் எனக்கு யார் உண்டு? பூலோகத்தில் உம்மைத் தவிர எனக்கு வேறே விருப்பமில்லை'' (சங் 73:25).

யோசுவா சொன்னார், ''நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம்'' (யோசுவா 24:15).

அத்தியாயம்

9

மலைகள் பெயரட்டும்!

''எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டு போ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

ஆதலால், நீங்கள் ஜெபம் பண்ணும்போது எவைகளைக் கேட்டுக் கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசி யுங்கள். அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன்.

நீங்கள் நின்று ஜெபம் பண்ணும்போது, ஒருவன் பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்குமானால், பரலோகத்தி லிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும் படி, அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள்'' (மாற்கு 11:23-25).

மலைகளைக் கண்டு மலைத்து நில்லாதே; நீ மலைகளைப் பெயர்க்கும்படி அழைக்கப்பட்டவன்!

அன்று பட்டுப்போன காட்டத்தி மரத்தைப் பார்த்து, அதிசயப் பட்டுக் கொண்டிருந்த பேதுருவைப் பார்த்து, இதைவிட மேலான அதிசயங்களை நீ காண்பாய் என்று கர்த்தர் உற்சாகப் படுத்தியபோது பேதுருவின் அதிர்ச்சி இன்னும் அதிகமானது. ஆம், மலைகளைப் பெயர்க்கும்படி அழைக்கப்பட்டவன்.

கனியில்லாத அத்திமரத்தை இயேசு சாயங்கால வேளையில் சபித்தார். ஆனால் அடுத்த நாள் காலையில் அவ்வளவு சீக்கிரத்தில் அது முற்றிலும் பட்டுப்போயிருந்ததென்றால் அது எவ்வளவு பெரிய ஆச்சரியம்! வேர் புழு அந்த மரத்தின் வேரையெல்லாம் அரித்தாலும் அந்த மரம் வாடிப்போகுமே தவிர பட்டுப்போகாதே! ஆனால் கர்த்த ருடைய வார்த்தை எவ்வளவு வல்லமையுள்ளதாய் அந்த மரத்தைப் பட்டுப் போகப்பண்ணியது! பேதுருவுக்கு அது ஆச்சரியம்தான்! ஆனால் கர்த்தருக்கு அது ஆச்சரியமல்ல!

கர்த்தர் செய்த அற்புதங்களையெல்லாம் பார்த்து அதிசயித்து ''சபாஷ்'' போட்டுக் கொண்டிருந்த பேதுருவுக்கு கர்த்தர் இன்னும் ஒரு ஆச்சரியத்தைக் கொடுத்தார். நீ மலைகளைப் பெயர்த்து சமுத்திரத்திலே தள்ளுண்டு போகச் செய்யப் போகிறாய் என்பதே!

ஆம்! நீ மற்றவர்கள் செய்கிற அதிசயங்களிலேயே மனம் லயித்துப்போய், மெய்மறந்திருந்தால் நீ எப்பொழுது அதிசயங்களைச் செய்யப்போகிறாய்? நீ கர்த்தருக்காக களத்தில் குதி!

காட்டத்தி மரத்தைப் பட்டுப்போகச் செய்வது சிறிய அற்புதம்! ஆனால் கட்டளையிடும்போது மலைகள் பெயர்ந்து சமுத்திரத்தில் போய் விழ ஆயத்தமாய் இருக்கிறது அது பெரிய அற்புதம்!

வாக்குத்தத்தங்களைக் கொடுப்பதில் கர்த்தர் ஒரு கருமி அல்ல; ஈயாக் கஞ்சனல்ல!

இயேசு சொன்னார்: ''என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்'' என்றார் (யோவான் 14:12).

பேதுருவே, நான் உனக்கு முன்பாக ஒரு காட்டத்தி மரத்தைப் பட்டுப்போகச்செய்து காண்பித்தேன். நீ அற்புதத்தைச் செய்ய காட்டத்தி மரங்களைப் பார்த்துக் கொண்டிராதே! மேலான காரியத்தை, பெரிய மலையைப் பெயர்க்கும் வழியைப் பார்! நீ, நான் செய்த கிரியைகளைப் பார்க்கிலும், பெரிய மகத்துவமான கிரியைகளைச் செய்ய வேண்டும்.

நம் அன்புள்ள தேவன் எவ்வளவு கரிசனையோடு நம்மை தட்டிக் கொடுக்கிறார்; உற்சாகப்படுத்துகிறார்; செயல் வீரராக்குகிறார்!

ஆகவேதான் அன்று வில்லியம்கேரி, ''கர்த்தருக்காக பெரிய காரியங்களைத் திட்டமிடு; பெரிய காரியங்களைச் செய்து முடி'' என்று முழங்கினார்!

உன் விசுவாச எல்லையைப் பெரிதாக்கு; உன் தரிசன எல்லையை விரிவாக்கு; உன் செய்கையின் எல்லைகளை விசாலப்படுத்து!

காட்டத்தி மரங்களைப் பாராமல், பெயர்க்கப்பட வேண்டிய மலைகளை நோக்கி விசுவாசத்தோடு கடந்துவா!

இன்றைக்கு உனக்கு எதிராக நிற்கும் மலைகள் என்னென்ன? உன் ஆவிக்குரிய ஜீவியத்தைத் தடுக்கும் குன்றுகள் என்னென்ன? உன் சரீர

சுகத்தைத் தடுக்கும் மலைகள்; உன் சந்தோஷத்திற்கும், குடும்ப ஐக்கியத்திற்கும் குறுக்கே நிற்கும் மலைகள்; உன் அலுவலகத்திலும், தொழில் துறையிலும் உன்னை மட்டந்தட்டும் மலைகள் என்னென்ன? வரிசைப்படுத்து நீ அவைகளை பெயர்த்து என்றென்றும் காண முடியாதபடி கடலிலே தள்ளப்போகிறாய்.

கர்த்தர் உன் பட்சத்தில் நிற்கிறார், ''இந்த மலையைப் பார்த்து நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டு போ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்'' *(மாற்கு 11:23)* என்கிறார்.

மீண்டும் கர்த்தர் உறுதிமொழி தருகிறார், ''கடுகு விதையளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால் நீங்கள் இந்த மலையைப் பார்த்து, இவ்விடம் விட்டு அப்புறம் போ என்று சொல்ல, அது அப்புறம் போம்; உங்களால் கூடாத காரியம் ஒன்றுமிராது'' *(மத் 17:20)*.

நம் ஆண்டவர் பெரியவர்! மலைகளை எளிதாய் பெயர்க்கும் வல்லமையுள்ளவர்! நாம் அவருடைய பிள்ளைகள். அவரது வாக்குத் தத்தங்களுக்குச் சுதந்தரவாளிகள். ''என் கையின் கிரியைகளைக் குறித்து எனக்குக் கட்டளையிடுங்கள்'' என்று அவர் சொன்னார்!

நம் ஆண்டவர் வல்லமையுள்ளவர்! அவர் மலைகளை ஆட்டுக் கடாக்களைப் போலவும், குன்றுகளை ஆட்டுக்குட்டியைப் போலவும் துள்ளப்பண்ணுகிறவர்! *(சங் 114:4)*.

அன்றைக்கு செருபாபேலுக்கு விரோதமாக சாத்தான் தடைகளையும், எதிர்ப்புகளையும் ஒரு பெரிய பர்வதத்தைப் போல கொண்டு வந்தான். கர்த்தர், ''பெரிய பர்வதமே, நீ எம்மாத்திரம்? செருபாபேலுக்கு முன்பாக நீ சம பூமியாவாய்'' என்று சொல்லி மலைபோன்ற தடைகளை தகர்த்தெறிந்தார் (சகரியா 4:7). தேவபிள்ளையே, அந்த தேவன் மாறாதவர். சத்துரு வெள்ளம் போல் வரும்போது ஆவியானவர் உனக்காக கொடியேற்றுவார்!

உன் மலைகள் என்ன? அது எரிகோ கோட்டையானாலும் சரி. கோலியாத்துக்களானாலும், பார்வோன்களானாலும் சரி. அல்லது உலகம் மாம்சம் பிசாசானாலும் சரி. அது கவலையில்லை! நீ ஜெயங் கொள்ளவே அழைக்கப்பட்டிருக்கிறாய்! மலையைப்போல வரும் பிரச்சனைகளைப் பனியைப் போல மறையப்பண்ணும் வல்லமை யுள்ளவர் உன் பட்சத்தில் இருக்கிறார் என்பதை மறந்து போகாதே!

மலையைப் பெயர்க்கும் வழி முறைகள் என்னவென்று தியானிப் போமா?

உலகப்பிரகாரமான மலைகளை வெடி மருந்தைக் கொண்டு தகர்ப்பார்கள் (Dynamite) ஆனால், சாத்தான் கொண்டு வந்து நிறுத்தும் அந்தகார சக்திகளின் மலையைத் தகர்க்க நமக்கு இருக்கும் ஆயுதங்கள் என்ன?

இயேசு அவைகளை வரிசைப்படுத்திக் காண்பிக்கிறார்.

1. விசுவாசம்!

2. ஜெபம்!

3. மன்னிக்கும் சுபாவம்!

இந்த மூன்றும் எல்லா வெடி மருந்தைப் பார்க்கிலும் வல்லமை யுள்ளது. இவை மூன்றும் ஒன்றாகச் சேரும்போது அத்தனை சாத்தான் கூட்டங்களுக்கும் ஒன்றாகச் சேர்ந்து இமய மலையைப்போல எதிர் வந்தாலும் அவைகளால் நின்று பிடிக்க முடியாது. நீ ஜெயங் கொண்டவனாய் விளங்குவாய்!

1. முதல் வெடி மருந்து விசுவாசம்:-

''தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால்...'' மலைகளைப் பெயர்க்க கர்த்தர் கொடுக்கும் முதல் நிபந்தனை அதுதான். சந்தேகப்படாமல் விசுவாசித்தால்...

ஆம். கர்த்தர் மேல் விசுவாசமுள்ளவர்களுக்கு மட்டுமே அவர் கிரியை செய்கிறவராய் இருக்கிறார்! அவரை சந்தேகிக்கிறவர்களுக்கு அவரால் எப்படி உதவி செய்ய முடியும் அநேகர் சந்தேகம் பாதி, விசுவாசம் பாதி என்று அலைமோதுகிறார்கள்.

யாக்கோபு திட்டமாய் எழுதுகிறார்: ''அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன்; சந்தேகப் படுகிறவன் காற்றினால் அடிப்பட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான். அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக. இருமன முள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான்'' (யாக் 1:6-8).

''நீங்கள் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள்'' என்பது நம் அருமை ஆண்டவருடைய கட்டளை (மாற்கு 11:22).

விசுவாசத்தில் வளருவது எப்படி? விசுவாசத்தில் பெலன் கொள்ளுவது எப்படி? விசுவாசத்தில் அரிய பெரிய காரியங்களைச் செய்வது எப்படி? என்று ஒருவேளை நீங்கள் கேட்கலாம். வேதம் பதில் சொல்கிறது: ''விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்'' (ரோமர் 10:17).

வேத வசனத்தை வாசிக்க, வாசிக்க நம் உள்ளத்தில் ஆண்டவரைப் பற்றி அறிவு வருகிறது. அந்த அறிவு விசுவாசத்தை உள்ளத்தில் ஊற்றாக சுரக்க வைக்கிறது.

வேதத்தில் கர்த்தர் செய்த அற்புதங்கள், அடையாளங்கள், வல்லமையான காரியங்களைத் தியானிக்கும்போது ஜீவ னுள்ள தேவன் என்னுடைய வாழ்க்கையிலும் மலைகளைப் புரட்டி தள்ளி அற்புதத்தைச் செய்வார் என்ற உறுதி ஏற்படுகிறது! ஆகவே கர்த்தரில் நாம் அதிகமாக சார்ந்து கொள்கிறோம்.

பல ஜீவனுள்ள சாட்சிகளைக் கேட்கிறோம். தேவனுடைய பிள்ளைகளோடு ஐக்கியம் கொள்ளுகிறோம். பிரசங்கங்கள் நம்மை உற்சாகப்படுத்துகின்றன. நம்மையறியாமல் நமக்கு விசுவாசம் பெருகுகிறது.

சீஷர்களும் ஆரம்பத்தில் விசுவாசத்தில் குறைவுள்ளவர்களாகத் தான் இருந்தார்கள். ஆனால் இயேசு கிறிஸ்துவின் செயல்களைக் கண்ணாரக் கண்டபோது அவர்கள் அவரில் விசுவாசம் வைத்தார்கள். வேதம் சொல்கிறது: ''இயேசு இந்த முதலாம் அற்புதத்தைக் கலிலேயாவிலுள்ள கானா ஊரிலே செய்து, தம்முடைய மகிமையை வெளிப்படுத்தினார்; அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள்'' (யோவான் 2:11).

நீங்கள் கடற்கரை ஓரத்தில் நிற்கிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். ஒரு மீனவச் சிறுவன் வந்து, ''என்னோடு கூட கடலுக்குள் வருகிறீர்களா?'' என்று உங்களிடம் கேட்கிறான்.

உங்களுக்குத் தைரியமில்லை. கடலுக்குள் செல்ல உங்களுக்குப் பயம் ஆனால் அந்தச் சிறுவனோ கடலில் குதித்து தைரியமாய் நீந்திச் செல்கிறான், மலைபோல் வரும் கடல் அலைகளைக் கண்டு பயப்படாமல் அவைகளுக்கு மேலாய் மிதந்து செல்கிறான்.

உங்களால் முடியவில்லை; ஆனால் அவனால் முடிகிறது! காரணம் என்ன தெரியுமா? அவனுக்கு கடலைப் பற்றியும் தெரியும்; நீச்சலும் தெரியும்! ஆகவே அவன் விசுவாசத்தோடு முன்னேறுகிறான்!

நாம் விசுவாசத்தில் முன்னேற கிறிஸ்துவைக் குறித்து தெரிந்திருக்க வேண்டும். மட்டுமல்ல, நீச்சலாகிய விசுவாச பயிற்சியும் தேவை!

''கிறிஸ்துவை அறியும் அறிவின் மேன்மைக்காக!'' என்று அப்போஸ்தலனாகிய பவுல் மார்தட்டி முழங்குகிறார். அதற்காக நான் எல்லாவற்றையும் நஷ்டமென்றுவிட்டேன். குப்பையுமாக எண்ணு கிறேன் என்று சொல்லி, கிறிஸ்துவை அறிகிற அறிவின் மேன்மையால் விசுவாச வீரரானார்! மலையைப் போன்று வரும் கடல் அலைகளை எதிர்த்து நீந்தும் நீச்சல் வீரரானார்.

தேவபிள்ளையே, உன் தேவனை அறிந்துகொள்! அவருடைய வழிகளை அறிந்துகொள்! அவருடைய வாக்குத்தத்தங்களை அறிந்து கொள்! அவர் செய்திருக்கும் அற்புதங்களையெல்லாம் நீ அறிந்துகொள்! உன் விசுவாசம் பெரிதாகி நீ பெலனுள்ளவனாய்! உனக்கு எதிர் நிற்கும் மலையின் வலிமையைப் பார்க்கிலும் உன் விசுவாசத்தின் வலிமை மிக மிகப் பெரியதாயிருக்கும்!

வேதம் சொல்லுகிறது, ''விசுவாசத்தினாலே அவர்கள் ராஜ்யங் களை ஜெயித்தார்கள், நீதியை நடப்பித்தார்கள், வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள், சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள், அக்கினியின் உக்கிரத்தை அவித்தார்கள், பட்டயக்கருக்குக்குத் தப்பினார்கள், பலவீனத்தில் பலன் கொண்டார்கள், யுத்தத்தில் வல்லவர்களானார்கள், அந்நியருடைய சேனைகளை முறியடித்தார்கள்'' (எபி. 11:33,34).

தேவபிள்ளையே, இந்த விசுவாச வீரர்களின் பெயர் பட்டியலில் உன் பெயரும் இடம் பெறட்டும். விசுவாசத்தினாலே, நீ மலைகளை பெயர்த்து சமுத்திரத்தில் தள்ளினாய் என்று பொறிக்கப்படட்டும். தேவபிள்ளையே, விசுவாச வீரனாயிரு.

2. இரண்டாவது வெடி மருந்து ஜெபம்:

தொடர்ந்து இயேசு சொன்னார்: ''நீங்கள் ஜெபம் பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக் கொள்வோம் என்று விசுவாசியுங்கள்'' (மாற்கு 11:24).

ஜெபம்! அது வல்லமையான வெடி மருந்து! அந்த ஜெபம் உலகங்களை அசைக்கிறவரது கரங்களை அசையச் செய்து மலைகளைப் பெயர்த்துத் தள்ளுகிறது!

நீ உன் ஜெப வாழ்க்கையைச் சொல்; நீ எப்படிப்பட்ட மலைகளைப் பெயர்ப்பாய் என்பதை நான் உனக்குச் சொல்லி விடுகிறேன் என்றார் ஒரு பக்தன்!

ஐந்து நிமிட பாரம்பரிய ஜெபத்தைச் சொல்லி விட்டு மலையைப் பெயர்க்க எண்ணாதே! மண்மேட்டைக் கூட உன்னால் அசைக்க முடியாது.

கொஞ்ச ஜெபம், கொஞ்ச பெலன்; அதிகமான ஜெபம், அதிகமான பெலன்; ஊக்கமான, வல்லமையான ஜெபம், மலைகளை புரட்டித் தள்ளும் பெலனை உனக்குப் பெற்றுத்தரும்.

தாவீதின் வாழ்க்கையை நோக்கிப் பாருங்கள்! பல மலைகளைப் புரட்டித் தள்ளிய ஜெப வீரன் அவன்! அந்த மலை கரடியின் வேஷத்தில் வந்தாலும் சரி, சிங்கமாக சீறினாலும் சரி, கோலியாத்தாக உறுமினாலும் சரி, சவுலாக பின் தொடர்ந்தாலும் சரி. அத்தனை மலைகளையும் புரட்டித் தள்ளி விட்டு சிங்காசனத்தில் கெம்பீரமாக அமர்ந்தார்!

''உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்து போவேன்; என் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டுவேன்'' (சங். 18:29) என்பதே அவர் முழக்கம்! காரணம், அவரது விசுவாசம் ஜெபத்தால் தாங்கப்பட்டதாக இருந்தது. ''எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன். வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத் திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்'' என்கிறார் (சங். 121:1,2). ஆம், ஜெபத்தில் காத்திருப்பதும், காத்திருந்து ஜெபிப்பதும் அவர் வழக்கமாயிருந்தது. ஆகவேதான் அவரைக் கண்டு மலைகள் விலகினது!

தேவபிள்ளையே, இன்று கர்த்தருடைய சுவிசேஷத்திற்கு விரோதமாகவும், ஊழியத்திற்கு விரோதமாகவும் பல இயக்கங்கள் எழும்பியிருக்கின்றன! கிறிஸ்துவை விட்டு நம்மைப் பிரிக்கத்தக்கதான பலத்த சத்துவங்கள் வல்லமையாய்க் கிரியைச் செய்துக் கொண்டிருக்கின்றன. உலகக் கவலைகளும், மாம்ச இச்சைகளும், சாத்தானின் தந்திரங்களும் மலைகளைப்போல பெரிதாகி பயமுறுத்துகின்றன.

இந்த எல்லாச் சத்துவங்களின் மேலும் வெற்றி பெற்று ஜெய வீரராய் விளங்க ஒரே ஒரு வழி ஜெபம் மட்டுமே, ''சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணி, அதன் பொருட்டு மிகுந்த மன உறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள்'' (எபே. 6:18) என்று அப். பவுல் ஆலோசனை கூறுகிறார்.

மலைகளைக் கண்டு சோர்ந்துபோகாதே! இது எந்தக் காலத்தில் தான் விலகுமோ என்று அதைரியப்படாதே! உடனே ஊக்கமான

ஜெபத்திலிறங்கு! உன் ஜெப நேரத்தை அதிகப்படுத்து! போதுமான அளவு ஜெபித்தால் போதுமான அளவு பெலன்கொள்வாய்!

3. மூன்றாவது வெடி மருந்து மன்னிக்கும் சுபாவம்:-

மலையைப் பெயர்க்கும் வழிகளை கர்த்தர் சீஷர்களுக்குப் போதித்தபோது மூன்றாவதாக அவர் மன்னிக்கும் சுபாவத்தையும் வலியுறுத்துகிறதையும் வாசிக்கிறோம்.

தொடர்ந்து கிறிஸ்து கூறுவதை அந்தப் பகுதியில் வாசித்துப் பாருங்கள். ''நீங்கள் நின்று ஜெபம் பண்ணும்போது, ஒருவன்பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்குமானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி, அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள்'' (மாற்கு 11:25).

மன்னிக்காத இருதயத்தோடுகூட, ஜெப அறையில் பிரவேசிப்பதால் பிரயோஜனமில்லை! உள்ளத்தில் கசப்பையும் வைராக்கியத்தையும் வைத்துக்கொண்டு எப்படி ஜெபிப்பது?

நீங்கள் உங்கள் மாமனார், மாமியாரோடு சண்டை போட்டுவிட்டு, கோபத்தோடு வீட்டிற்கு வருகிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். வீட்டில் உங்கள் பிள்ளை வியாதியாய்க் கிடக்கிறது. நீங்கள் ஜெபிக்க ஆரம்பிக்கிறீர்கள். ஆனால் உங்கள் உள்ளத்தை குற்ற மனச்சாட்சி குத்துகிறது; மனம் வாதிக்கிறது, உங்களால் ஜெபிக்க முடிவதில்லை! எங்கே நாம் மலைகளைப் புரட்டப்போகிறோம்; எங்கே பிள்ளை குணமாகப்போகிறது என்று அவிசுவாசம் பிடித்துக்கொள்கிறது.

நீங்கள் கிறிஸ்தவர்கள் என்று கேள்விப்பட்டு பிசாசு பிடித்த ஒரு பெண்ணை உங்களிடம் கொண்டு வந்து ஜெபிக்கும்படி கேட்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அப்பொழுதுதான் கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்ட பிரச்சனையினால் நீங்கள் கோபத்தோடு மன்னியாமல் இருக்கிறீர்கள். எப்படி உங்களால் ஜெபிக்க முடியும்? மலைகளை உங்களால் சந்திக்க முடியவில்லை!

அன்றைக்கு பேதுரு இயேசுவினிடத்தில் வந்து ''ஆண்டவரே, என் சகோதரன் எனக்கு விரோதமாகக் குற்றஞ்செய்து வந்தால், நான் எத்தனை தரம் மன்னிக்க வேண்டும் ஏழுதரம் மட்டுமோ?'' என்று கேட்டான்.

ஏழு தரம் மன்னித்தல் என்பது அன்றைக்கிருந்த ரபிமார்களின் போதனையாயிருந்தது. ஏழு என்பது பூரணமான மன்னிப்பு. ஏழு முறை

தாண்டிவிட்டால், எட்டாவது முறை மன்னிக்க வேண்டிய அவசிய மில்லை; மன்னிப்பின் தருணங்கள் முடிந்து விட்டது என்று அவர்கள் போதித்தார்கள்.

ஆனால் இயேசு சொன்னார், ''ஏழு தரம் மாத்திரமல்ல, ஏழெழுபது தரம் மட்டும் என்று உனக்குச் சொல்லுகிறேன்'' என்றார். இதற்கு நானூற்று தொண்ணூறு தடவை மட்டுமே மன்னிக்க வேண்டும் என்று அர்த்தமல்ல. வரையரையின்றி மன்னிப்போம். அப்பொழுது நம் உள்ளம் தேவ வல்லமை இறங்க ஆயத்தமாயிருக்கும். விடுதலையோடு மலைகளை நம்மால் அகற்ற முடியும்.

வெடி மருந்தில் தண்ணீர் பட்டால் அந்த மருந்து பிரயோஜன மற்றதாகி விடும். அதுபோலவே, மன்னிக்காத சுபாவமும், குற்றமனச் சாட்சியும் தண்ணீரைப் போல கிரியை செய்து வெடி மருந்தாகிய விசுவாசத்தையும் ஜெபத்தையும் கெடுத்துவிடக் கூடும்.

வேதம் சொல்வதைக் கேளுங்கள், ''இரக்கஞ்செய்யாதவனுக்கு இரக்கமில்லாத நியாயத்தீர்ப்புக் கிடைக்கும்; நியாயத்தீர்ப்புக்கு முன்பாக இரக்கம் மேன்மை பாராட்டும்'' (யாக் 2:13). ''மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரம பிதா உங்களுக்கும் மன்னிப்பார். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்'' (மத் 6:14,15).

மன்னியுங்கள்! மன்னித்ததை மறந்து விடுங்கள்! கர்த்தருடைய மன்னிப்பின் சிந்தையால் நிரப்பப்படுங்கள்! உங்களுக்கு முன்நிற்கும் மலைகளை கவனத்தில் கொண்டு எல்லாரோடும் ஒப்புரவாகுங்கள். ஒப்புரவாகுதலில் மிகப் பெரிய வல்லமை அடங்கியிருக்கிறது என்பதை மறந்து போகாதிருங்கள்!

''கன்மலைகள் பெயர்க்கும்படியாய்
கர்த்தர் உன்னை கரம் பிடித்தார்
காத்திருந்து பெலனடைந்து
கழுகுபோல எழும்பிடுவாய்''

என்று பக்தன் பாடுகிறான். திடன் கொள்ளுங்கள்; கர்த்தரில் பெலனடையுங்கள்; மலைகளைப் பெயர்த்துத் தள்ளுங்கள்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

மனம்விட்டு உங்களோடே...!

இந்தப் புத்தகத்தின் மூலம் உங்களைச் சந்திக்கக் கிருபை செய்த தேவனை நன்றியோடு ஸ்தோத்தரிக்கிறேன். கிருபையும் சமாதானமும் உங்களில் பெருகுவதாக!

"உன் பெலனை மிகவும் ஸ்திரப்படுத்து" என்ற புத்தகத்தை உங்களுடைய கைகளில் தவழச் செய்த தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக! ஏறக்குறைய மூன்று அல்லது நான்கு ஆண்டுகளாக தொடர்ந்து பல பத்திரிகைகளில் எழுதின கட்டுரைகளை இந்தப் புத்தகத்தில் தொகுத்து விளக்கியிருக்கிறேன். நிச்சயமாகவே இது உங்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கும் என்று நான் எண்ணுகிறேன்.

1986 ஆம் ஆண்டு நான் தூத்துக்குடியிலுள்ள தூய பேட்ரிக் ஆலயத்திற்கு தேவ செய்தி கொடுக்கச் சென்ற போது அருமையான சகோதரர் கே.பி.எஸ். தேவதாஸ் அவர்களையும் அவர்களுடைய குடும்பத்தினரையும் சந்தித்தேன். அவர்கள் கர்த்தருடைய ஊழியத்தின் மேலும், ஊழியக்காரர் மேலும் அளவில்லாத அன்புடையவர்கள். அவர்கள் இந்தப் புத்தகத்தை வெளியிடும் செலவில் ஒரு பகுதியை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டார்கள்.

Mr. K.P.S. Devadoss,

Manakkavalan Street, Tuticorin.

இந்தப் புத்தகத்தால் வரும் ஒவ்வொரு ஆசீர்வாதமும் அவர்களையும், அவருடைய அருமைக் குடும்பத்தினரையும் சேருவதாக. கர்த்தர் அவர்களை விசேஷித்த விதமாக ஆசீர்வதிக்கும்படி நீங்கள் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

இந்தப் புத்தகத்திற்கு ஓய்வு தர வேண்டாம். குறைந்தது ஐம்பது பேருக்காவது வாசிக்கக் கொடுங்கள். நீங்கள் அனுப்பும் காணிக்கை புதுப் புத்தகங்களை மலரச் செய்யும்!

எமது பிற வெளியீடுகள்!

267.	என் ஆத்தும நேசரே!	10.00
268.	அவர் செட்டையின் கீழ்!	10.00
269.	பூரணத்தை நோக்கி!	10.00
270.	தாழ்மையின் ஆசீர்வாதங்கள்!	10.00
271.	நடனத்தோடு!	10.00
272.	ஞானம் கூப்பிடுகிறது!	10.00
273.	அள்ளிக்கொடுக்கிறவர்!	10.00
274.	முதிர்வயதிலும் பெலன்!	10.00
275.	இனிய துணிக்கைகள்!	10.00
276.	விளைந்த பலன்!	10.00
277.	ஆசீர்வாதம் சாபமும்!	10.00
278.	ஒருமனப்பாடு!	10.00
279.	தேனிட்ட பணியாரம்!	10.00
280.	நாட்களை எண்ணும் அறிவு!	10.00
281.	புதிய வாழ்க்கை! (தேவராஜுலு)	10.00
282.	குற்றஞ் சாட்டுகிறார்களா?	10.00
283.	தாயைப் போல!	10.00
284.	துக்கத்திலிருந்து சந்தோஷத்திற்குள்!	10.00
285.	ஒரே தரம்!	10.00
286.	தனிமையா?	10.00
287.	எதிர்பாருங்கள்!	10.00
288.	ஊழியத்தின் பாதையிலே!(ஜேஸ்மின் பால்ராஜ்)	10.00
289.	சந்திக்க ஆயத்தப்படு!	10.00
290.	The God of all Comfort	10.00
291.	The Breaker of Barriers	10.00
292.	To Him that overcometh	10.00
293.	சிகப்பு ரோஜா (கரோலின் ஜெயபால்)	10.00
294.	கனிதரும் செடி!	10.00
295.	சகோதரிகளுக்கு! (கரோலின் ஜெயபால்)	10.00
296.	கிறிஸ்துவின் பொன்மொழிகள்!	10.00
297.	அனுபவ சிறுக்கதைகள்! (ஜேஸ்மின் பால்ராஜ்)	10.00
298.	Heavenly Manna For Everyday	30.00
299.	தூண்டில் முள்!	10.00

300.	உலகமெங்கும்!	10.00
451.	காப்பார் உன்னைக் காப்பார்!	10.00
452.	தேன் துளி துணுக்குகள்!	10.00
453.	தேனும் பாலும் அறுபத்தாறு! (J.J. குருசிங்)	10.00
454.	பெலப்படுத்தும் சம்பவங்கள் பத்து! (J.J. குருசிங்)	10.00
455.	Be Led by the Spirit	10.00
456.	ஒத்தாசை வரும்!	10.00
457.	குயவன் கையில்!	10.00
458.	மான்களின் நீரோடை!	10.00
459.	தெய்வீக ஆரோக்கியம்! (கரோலின் ஜெயபால்)	10.00
460.	கடனாளியோ?	10.00
461.	உங்கள் செவிகள் கேட்க! (கிளிபோர்டு குமார்)	10.00
462.	உங்களை அறிந்திருக்கிற கர்த்தர்!	10.00
463.	சாரோனின் ரோஜா!	10.00
464.	வெற்றி உண்டு!	10.00
465.	இயேசு கூடவருவார்!	10.00
466.	ஜீவ கிரிடம்!	10.00
467.	உற்சாகம் ஐசுவரியமும்!	10.00
468.	சந்தோர்ஷப்பட்டு களிக்கூறுங்கள்!	10.00
469.	நமக்காக! நமக்காக! நமக்காக!	10.00
470.	சிந்தனைக்கு சிறுகதைகள்! (H.M. பாண்டியன்)	10.00
471.	அந்த தியாகம் உனக்காக! (தேவ ராஜுலு)	10.00
472.	போற்றுவோம் புண்ணியரை!	10.00
473.	நரகத்தைப் பற்றிய... வெளிப்பாடு! (காதரின் பாக்ஸ்டர்)	20.00
474.	முத்துக்கள் முப்பது!	10.00
475.	வேதத்திலிருந்து ஆழமான துணுக்குகள்!	10.00
476.	ஏதேனில் ஆதிமணம்! (லதா ரமேஷ்)	10.00
477.	சுவிசேஷத்தை அறிவிக்கும் பணியில்! (ராஜன்)	10.00
478.	கோபக் கலசங்கள்! (டுணாமிஸ்)	10.00
479.	சந்தோஷமாயிருங்கள்! சந்தோஷமாயிருங்கள்!	10.00
480.	எல்லா சூழ்நிலையிலும் மனமகிழ்ச்சியாய் இருப்பது எப்படி?	10.00
481.	நிரம்பிய களஞ்சியங்கள்!	10.00
482.	ஓட்டமும், போராட்டமும்!	10.00
483.	விசுவாச விரர்களும், வீராங்கனைகளும்!	10.00
484.	பூரண சமாதானம், தெய்வீக சமாதானம்!	10.00
485.	நூறு மடங்கு ஆசீர்வாதங்கள்!	10.00

486.	நம்மில் வாசம்பண்ணும் தேவன்!	10.00
487.	சமாதானம் வேண்டுமா?	10.00
488.	ஆயுதங்கள்! வல்லமையான ஆயுதங்கள்!	10.00
489.	விசுவாச வார்த்தைகளும், ஆசீர்வாதங்கள்!	10.00
490.	அன்பின் ஊற்றுக்களும், அன்பின் ஆறுகளும்!	10.00
491.	ஆசையாய் தொடருகிறேன்!	10.00
492.	அன்பிலே பூரணராவது எப்படி?	10.00
493.	நீங்கள் யார்? உங்கள் ஆண்டவர் யார்?	10.00
494.	அழைத்த அழைப்பிலே மேன்மையடைவது எப்படி?	10.00
495.	சர்வ வல்லமையுள்ள தேவன்!	10.00
496.	பூரண பரிசுத்தத்தை நோக்கி!	10.00
497.	மகிமையின் இராஜா!	10.00
498.	பெரிய காரியங்களை எதிர்பாருங்கள்!	10.00
499.	சிருஷ்டி கர்த்தர்!	10.00
500.	மேலாவாய்! தலையாவாய்!	10.00
701.	உண்மையும்! உத்தமும்!	10.00
702.	பரிசுத்தத்தை கற்றுக்கொள்ளுங்கள்!	10.00
703.	நேர்த்தியான சுதந்திரங்கள்!	10.00
704.	உங்களை அழைத்திருக்கிறார்!	10.00
705.	திரும்பத் தருவார்!	10.00
706.	ஆவியும் ஜீவனுமான கர்த்தருடைய வார்த்தை!	10.00
707.	தளர விடாதேயுங்கள்!	10.00
708.	விடுதலை ஆகும் வழி! (ஆல்ஃபிரட் எட்ஷன்)	10.00
709.	தழும்புகளால் குணமானோம்! (சுரேஷ் ஜான்சன்)	10.00
710.	அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி!	10.00
711.	யுத்தம் கர்த்தருடையது!	10.00
712.	ஞானத்தின் ஏழுத்தூண்கள்!	10.00
713.	அழைத்தவர் உண்மையுள்ளவர்!	10.00
714.	ஆச்சரியமான உண்மைக் கதைகள்!	10.00
715.	மகிமையின் மேல் மகிமையும் மகிமையின் அபிஷேகம்!	50.00
716.	ஆவியின் கனிகளை அள்ளிக்கொடுப்பது எப்படி?	50.00
717.	ஆவியின் கனியோ!	10.00
718.	எபேசியர் நிருபத்திற்கு இனியதோர் விளக்கவுரை!	10.00
719.	என்னால் முடியுமா?	10.00
720.	சிறப்பான சிறுக்கதைகள்!	10.00
721.	Priceless Praises - 1000	10.00
722.	ஆவியானவரின் சின்னங்கள்!	100.00
723.	வெற்றியின் இரகசியம்!	10.00

724.	சோதனையில் இயேசுவின் வெற்றி!	10.00
725.	சோதனையில் வெற்றி!	100.00
726.	Daily Walk with JESUS	100.00
727.	சோதனையை ஜெயிப்பது எப்படி?	10.00
728.	சோதனைக்கு முன்பாக உங்கள் ஐம்புலன்கள்!	10.00
729	சோதனையில் அறிய வேண்டிய 4 சத்தியங்கள்!	10.00
730.	சோதிக்கப்படும் 5 முக்கிய காரியங்கள்!	10.00
731.	ஆபிரகாமின் சோதனை!	10.00
732.	சிம்சோனின் சோதனை!	10.00
733.	யோபுவின் சோதனை!	10.00
734.	வற்றாத நீரூற்று!	10.00
735.	உயிர்த்தெழுதலின் வல்லமை!	10.00
736.	நம்முடைய ஐந்து வீடுகள்!	10.00
737.	நியாயத்தீர்ப்பின் கல்!	10.00
738.	முத்தான முக்கனிகள்!	10.00
739.	ஆராதனையின் தேவன்!	100.00
740.	கர்த்தருடைய தேசத்தில் எமது பாதங்கள்!	20.00
741.	52 வல்லமையான பிர. குறிப்புகள்! பாகம்-1	100.00
742.	Healed by His Stripes	15.00
743.	வல்லமையான வரங்கள்!	150.00
744.	வாக்குத்தத்தங்கள் ஆயிரம் (பெரியது)	15.00
	(சின்னது)	10.00
745.	நல்ல காலம்	10.00
746.	Victory Over Temptation!	100.00
747.	தீர்மானம் சொர்க்கத்தில்	10.00
748.	சிறுகதைகளும் உண்மை சம்பவங்களும்-500 பாகம்-1	100.00
749.	கிறிஸ்துவின் மதுரமொழிகள்-1000	10.00
750.	சிறுகதைகளும் உண்மை சம்பவங்களும் -500 பாகம்-2	100.00
751.	Powerful and Revival Messages-52	100.00
752.	52 வல்லமையான பிர. குறிப்புகள் பாகம்-2	100.00
753.	வல்லமையான விசுவாச அறிக்கை 1000	10.00
754.	நீ போகும் பாதை!	10.00
755.	நித்தியத்தின் விளிம்பில்! (வெளியீடு)	30.00
756.	52 வல்லமையான பிரசங்கங்கள் பாகம்-3	100.00
757.	52 வல்லமையான பிரசங்கங்கள் பாகம்-4	100.00
758.	Precious Promises -1000	10.00
759.	இனிய சங்கீதங்களின் இன்பத் தியானங்கள்!	100.00
760.	52 வல்லமையான பிரசங்கங்கள் பாகம்-5	100.00

ஆவிக்குரிய நூல்கள்

ஆவிக்குரிய ஜீவியத்தில் வளருவதற்கும், ஆத்துமா பெலன் கொள்வதற்கும் ஆவிக்குரிய நூல்கள் இன்றியமையாதவை.

ஏறக்குறைய 700 க்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதிய சகோ. **J.** சாம் ஜெபத்துரை அவர்கள் இந்நூலையும் வெளி யிட்டிருக்கிறார்கள்.

பதினாறு ஆண்டுகள் அரசாங்கத்தில் பணியாற்றிய அவர் தன் வேலையை ராஜினாமா செய்துவிட்டு முழுநேர ஊழியத்தில் 1985 ஆம் ஆண்டு தீவிரமாக இறங்கினார். வல்லமையான மேடைப் பேச்சினாலும் எழுத்து ஊழியத்தினாலும் ஆயிரக்கணக்கானோரை அவர் கர்த்தருக்குள் வழி நடத்தியிருக்கிறார். இவர் கர்த்தரின் எழுத்தாணி.

புத்தக ஊழியத்தை ஊக்குவியுங்கள், அனேக ஆவிக்குரிய புத்தகங்கள் வெளிவர ஜெபியுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

புஸ்தகங்கள் கிடைக்கும் இடம்:
J. சாம் ஜெபத்துரை, M.A.
50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு,
கோடம்பாக்கம், சென்னை - 600 024
போன். 044-24840407, 24835299